பக்கங்கள் : பதின்னான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆடி 24 புதன்கிழமை (09.08.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 254

கொழும்பில் நேற்று நண்பகல் அதிர்ச்சிச் சம்பவம்:

## ஈ.பி.டி.பி. பிரமுகரின் வானில் திடீரெனக் குண்டு வெடிப்பு!,

### முன்னாள் எம்.பி. சிவதாஸன் படுகாயம்; சிறுவன் உட்பட இரண்டு பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக.09

கொழும்பு, பம்பலப்பிட்டியில் - 'டிக்மன்ஸ்' வீதி, 'மிலாகிரி அவனியு' பகுதியில் - நேற்றுப் பிற்பகல் 2.45- மணியளவில் வான் ஒன்று திடீரெனக் குண்டு வெடித்ததில் தீப்பற்றி எரிந்து கருகியது.

அந்த வாகனத்தில் பயணம் செய்து கொண்டிருந்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி.) ஆலோசகரும், அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சங்கரப்பிள்ளை சிவதாஸன் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். வாகனத்தில் அவருடன் கூட இருந்த மெய்ப் பாதுகாவலர் ஒருவர் உயிரிழந்தார். வீதியில் தனது தாயாருடன் சென்று கொண்டிருந்த மூன்று வயதுச் சிறுவன் ஒருவனும் குண்டு வெடிப்பில் சிக்குண்டு பலியானான்.

ஈ.பி.டி.பி. பிரமுகர் சிவதாஸனுடன் மேலும் 8 பேர் வரை காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

போக்குவரத்து சந்தடி மிகுந்த 'டிக்மன்ஸ்' வீதியில் திடீரெனப் பெரும் குண்டு வெடிப்புச் சத்தம் ஒன்றை அடுத்து வான் ஒன்று தீப்பற்றி எரிந்தது. இதனால், பெரும் பதற்றமும், பரபரப்பும் ஏற்பட்டது. வீதியில் சென்று கொண்டிருந்தோர் தலை தெறிக்க ஓடித்தப்பினர். உடனடியாகச் சம்பவம் நடந்த வீதிப் பகுதியை பொலிஸார் மூடினர். குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரும், பெரும் எண்ணிக்கையில்



பொலிஸாரும் அங்கு வந்து குவிந்தனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்புத்துறையில் நேற்றிரவு வர்த்தகர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம், ஓக.9

கொழும்புத்துறை, இலந்தைக்குளம் வீதியில் நேற்றிரவு 7 மணியளவில் வர்த்தகர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

அரியாலை, தபாற்கட்டைச் சந்தியில் ஹாட்வெயர்ஸ் கடை நடத்திவரும் ரட்ணவேல் அகிலன் (வயது 28) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

### கோண்டாவிலில் இளைஞன் சுட்டுக்கொலை!

வலி. வடக்கு, ஓக.9

கோண்டாவில் கிழக்கு - இருபாலை வீதியில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்.

ஊரெழு பகுதியில் வசிக்கும் சதாசிவம்

(14ஆம் பக்கம் பார்க்க)

மனிதாபிமானத்துக்கும் நோர்வேயின் கோரிக்கைக்கும் மதிப்பளித்து

# மாவிலாறு அணையைப் புலிகள் நேற்று மாலை திறந்துவிட்டனர்!

## படையினரே கால்வாயைத் திறந்தனராம் அரசு ஏட்டிக்குப் போட்டியாக அறிவிப்பு

திருகோணமலை, ஓகஸ்ட் 09

**கடந்த சுமார் 19 தினங்களாக தடுக்கப்பட்டிருந்த மாவிலாறு ஆற்றின் அணையை விடுதலைப் புலிகள் நேற்றுமாலை திறந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கான நீரோட்டத்தை அனுமதித்திருக்கின்றனர்.**

**அனுசரணைத் தரப்பான நோர்வே கேட்டுக்கொண்டதற்கு இணங்கவும் சர்வதேச சமூகத்தின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்தும் தாங்களாகவே - ஒருதலைப்பட்சமாக - அணையைத் திறப்பது என்று புலிகள் முடிவுசெய்து அதன்படி நேற்றுமாலை அதனைத் திறந்துவிட்டனர் என்று விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.**

**ஆனால், தமது படைகளே அந்தப் பகுதியில் தாக்குதல் நடத்தி முன்னேறிச் சென்று அணையின் கால்வாயைத் திறந்தன என்று அரசுத் தரப்பில் - ஏட்டிக்குப்போட்டியான - அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது.**

(14ஆம் பக்கம் பார்க்க)

### பன்குளத்தில் கிளைமோர் 2 படையினர் பலி!

திருகோணமலை, ஓக.9

திருகோணமலை - யாழ்ப்பாணம் வீதியில் பன்குளம் பகுதியில் வெல்வெரி என்னும் இடத்தில் நேற்றுக்காலை 8.30 மணியளவில் ரோந்து சென்ற படையினர் மீது கிளைமோர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலில் இரு படையினர் கொல்லப்பட்டனர். 3 படையினர் காயமடைந்தனர். (1-151)

### பொத்துவிலில் கிளைமோர் 2 அதிரடிப்படையினர் மரணம்

அம்பாறை மாவட்டம் பொத்துவிலில் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

### ஊடகவியலாளர் ஒய்வூதியச் சட்டமூலம் நிறைவேறியது

ஊடகவியலாளர்களுக்கான ஒய்வூதியச் சட்டமூலம் நேற்று சபையில் ஏகமனதாக நிறைவேறியது. சட்டமூலம் நிறைவேறியதை அடுத்து மிக விரைவில் ஊடகவியலாளர்களை இத்திட்டத்தில் இணைத்துக்கொள்ளும் வகையில் விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்திசெய்ய வேண்டும். இது தொடர்பான படிவம் இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தால் வழங்கப்படும். (ஐ - 02)

## தமிழ் ஊடகவியலாளரைப் பாதுகாப்பதில் அரசுக்கு மாற்றாந்தாய் மனப்பான்மை

### நாடாளுமன்றத்தில் மகேஸ்வரன் எம்.பி. சாடல்

கொழும்பு, ஓக.9

தமிழ் ஊடகவியலாளர்களுக்கு பாதுகாப்பு வழங்கவேண்டும். ஊடகவியலாளர்களுக்கு விசேட காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகப்படுத்தவேண்டும். தமிழ் ஊடகவியலாளர்கள் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தப்படுகின்றார்களா என்ற சந்தேகம் எழுகின்றது.

கொழும்பு மாவட்ட ஐ.தே.கட்சி எம்.பி. தி.மகேஸ்வரன் நேற்று ஊடகவியலாளர்களுக்கு ஒய்வூதியம் வழங்கும் சட்டமூல விவாதத்தை எதிர்க்கட்சி சார்பில் ஆரம்பித்து வைத்துப் பேசும்போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

'சண்டே டைம்ஸ்' ஊடகவியலாளர் இக்பால் அத்தாசுக்கு அதிரடிப்படைப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. தமிழ் ஊடகவியலாளர்களுக்கும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் 'உதயன்' பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டது. இருவர் கொல்லப்பட்டனர். கொழும்பில் 'சுடர் ஒளி' பத்திரிகை அலுவலகம் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இவற்றுக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை. இது குறித்து பாதுகாப்பு அமைச்சு கவனம் செலுத்த வேண்டும்.

'உதயன்' அலுவலகம் மீதான தாக்குதல் குறித்து உரிய விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளிகள் யார் என்பது பகிரங்கப்படுத்தப்படவேண்டும். அங்கு ஏற்பட்ட சேதங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும்.

திருகோணமலையில் கடந்த காலங்களில்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மூதூர் நிலைமையை விவாதிக்கக் கோரி நாடாளுமன்றில் எதிர்க்கட்சிகள் கோஷம்

கொழும்பு, ஓக.9

மூதூர் மோதல் சம்பவங்கள் மற்றும் அதனால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை தொடர்பாக உடனடியாக நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தவேண்டுமென எதிர்க்கட்சியினர் கோரிக்கை விடுத்ததால் நேற்று சபையில் பெரும் சர்ச்சை ஏற்பட்டது.

சபாநாயகர் சபையை 15 நிமிடங்கள் ஒத்தி வைத்து இது குறித்து முடிவெடுக்கக் கட்சித்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர் இரண்டாவது நாளாகவும் பகிஷ்கரிப்பு

## படையினர் தாக்கினர் என மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஓக.9

யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள் இரண்டாவது நாளாகவும் நேற்று பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமது கல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள இராணுவக் காவலரண்களை அகற்றுமாறு கோரியே தாம் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர் என மாணவர்கள் உதயனுக்குத் தெரிவித்தனர்.

சென். ஜோன்ஸ் மாணவர்கள் நேற்றுக் காலை 8 மணியளவில் கல்லூரி நுழைவாயிலில் அமைதியாக பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர் என்றும் அப்போது அவ் வீதிவழியாக பீல் பைக் மற்றும் பவள் கவச வாகனத்தில் வந்த படையினர் மாணவர்களை விரட்டியடித்தனர் என்றும் - மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சிதறி ஓடிய மாணவர்கள் வயர்கள், தடிகளால் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக மாணவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

பாடசாலைக்கு முன்பாகத் திரண்டிருந்த வேளையில் அங்கு வாகனங்களில் வந்த இராணுவத்தினர் தம்மைப் பயமுறுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் - அத்துடன் தமது மூன்று துவிச்சக்கர வண்டிகள் மாணவர் கையேடு மற்றும் புத்தகங்கள் ஆகியவற்றை அபகரித்துச் சென்றதாகவும் மாணவர்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

தாம் நேற்றுக்காலை பாடசாலைக்கு முன்பாக நின்றிருந்தவேளை திடீரென அங்கு வந்த இராணுவத்தினர் தம்மைப் பலவந்தமாகத் துரத்தியதாகவும் - தமது பொருள்களை அபகரித்துச் சென்றதாகவும் - அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

பகிஷ்கரிப்புப் போராட்டத்தை ஆதரித்து தமிழ் மாணவர் ஒன்றியத்தின் யாழ். மாவட்டப் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமது கல்லூரிச் சூழல் சுதந்திரமானதாக இருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்போடு இராணுவ அச்சுறுத்தல்கள் நீங்கவேண்டும் என இரு தினங்களாக போராட்டம் நடாத்தி வரும் சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவர்களின் கோரிக்கையினை இராணுவத் தரப்பு மிக விரைந்து பரிசீலனையில் எடுக்கவேண்டும்.

இராணுவக் கெடுபிடிகளின் மத்தியில் கற்றலைத் தொடர்ந்துவரும் குடாநாட்டு மாணவர்கள் ஆங்காங்கே இராணுவ அராஜகங்களுக்கு எதிராகக் கிளர்ந்தெளத் தொடங்கிவிட்ட நிலையில், சிங்கள இராணுவம் தமிழ் மாணவர்களின் கல்விக்கு இடையூறான விதத்தில் நடந்துகொள்வதை உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும்.

பாடசாலைகளுக்கு முன்னால் குறிப்பாக மகளிர் பாடசாலைகளை அண்டி இராணுவம் நிலைகொண்டிருந்து மாணவர்களின் ஆரோக்கியமான கல்விக்கு இடையூறு விளைவித்தவண்ணம் உள்ளது. பலமுறை அரசுக்கு நியாயம்கோரி கோரிக்கைகள் விடுத்தும் அரசு கரிசனை கொள்ளாமல் நயவஞ்சகத் தனமாக தமிழ் மாணவர்களின் கல்வி மீது தன் நாசகார வேலைகளைத் தொடர்ந்து வருகின்றது.

குடாநாட்டில் உள்ள அனைத்து மாணவர்களும் கொதிப்படைந்துள்ள இந்நிலையை சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பும் விளங்கிக்கொண்டு குடாநாட்டுப் பாடசாலைகளை சுதந்திரமாகக் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள அனுமதிக்கவேண்டும் - என்றுள்ளது. (1-8-13-86)



நல்லைக்கந்தன் ஆலயத்தின் மஞ்சத் திருவிழா நேற்று நடைபெற்றபோது முருகப் பெருமான் வள்ளி, தெய்வானை சமேதரராய் மஞ்சத்தில் எழுந்தருளி பக்தர்கள் புடைசூழ வீதியுலா வரும் காட்சியைப் படத்தில் காணலாம். *(படம்:- கதிரவன்)*

# தச்சந்தோப்பில் 'தேட்டம்' நிகழ்வு

செயல்திறன் அரங்க இயக்கமும் தச்சந்தோப்பு மகளிர் குழுவும் இணைந்து நடத்தும் 'தேட்டம்' கலை விளையாட்டுத்திடல் இன்று பிற்பகல் ஒரு மணிமுதல் தச்சந்தோப்பு பொதுத் திடலில் நடைபெறும்.

நெருக்கடிகள் மற்றும் அடக்குமுறைகளால் நெருக்கீடுகளுக்குள்ளான பெண்கள் மற்றும் சிறுவர்களை அதிலிருந்து மீட்டெடுக்கும் ஒரு செயற்பாடாக செயல்திறன் அரங்க இயக்கத்தால் கைதடி, நாவற்குழி பகுதிகளிலுள்ள கிராமங்களில் இந்தத் 'தேட்டம்' நிகழ்வு நடத்தப்பட்டு வருகின்றது.

இன்றைய நிகழ்வில் பெண்களுக்கான பாரம்பரிய விளையாட்டுக்கள், கலை நிகழ்வுகள், நாடக ஆற்றுகை என்பன இடம் பெறும். நிகழ்வில் பிரதம விருந்தினராக நாவற்குழி மகாவித்தியாலய அதிபர் திருமதி வ.மேகலிங்கம் கலந்து சிறப்பிப்பார்.(ம)

# தனியார் கல்வி நிறுவன உரிமையாளர் கடத்தல்

யாழ்ப்பாணம்,ஓக.9

இளைஞர் ஒருவரைப் படையினர் கடத்திச் சென்றனர் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

கெற்பேலி மேற்கைச் சேர்ந்த - சாவகச்சேரியில் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றை நடத்திவருபவரான சிதம்பரநடராசா சுரேஸ் (வயது-24) என்பவரே கடத்தப்பட்டுள்ளார் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கச்சாய் அம்மன் கோயிலுக்கு அண்மையில் கடந்த 6ஆம் திகதி காலை 10.30 மணியளவில் இவர் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவேளைபவள் கவச வாகனத்தில் வந்த படையினர் இவரைக் கடத்திச் சென்றதாக இவரது தாயார் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (8)

# சகல கல்வி வலய செயற்பாடுகளையும் முடக்குவதற்கு தொண்டராசிரியர் முடிவு

யாழ்ப்பாணம்,ஓக.9

தொண்டர் ஆசிரியர்களின் போராட்டத்திற்கு சாதகமான பதில் கிடைக்காத பட்சத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துக் கல்வி வலயப் பணிமனைகளின் செயற்பாடுகளும் முடக்கப்படும்.

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் எஸ்.ஜெயந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

தமக்கு நிரந்த நியமனம் வழங்குமாறு கோரி யாழ். மாவட்ட தொண்டராசிரியர்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் யாழ். கல்வி வலயச் செயற்பாடுகளை முடக்கி மறியற்போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதனால், நேற்று இரண்டாவது நாளாகவும் வலயக் கல்விப் பணிமனையின் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்தன.

இந்த மறியற் போராட்டம் குறித்து தொண்டராசிரியர்கள் சங்கத்தின் தலைவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

எமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி கடந்த 7ஆம் திகதி வலயக் கல்விப் பணிமனையின் செயற்பாடுகளை முடக்கி மறியற் போராட்டத்தில் ஈடுபட்டோம்.

அன்றையதினம் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நற்குணம் எமது போராட்டத்தைக் கருத்திற்கொள்ளாது தேசிய பாடசாலையில் சேவையாற்றும் தொண்டராசிரியர்களுக்கு யாழ். கனகரத்தினம் ம.ம.வித்தியாலயத்தில் நேர்முகப்பரீட்சையினை நடத்தி விட்டுச் சென்றுள்ளார்.

அவரது இத்தகைய செயற்பாட்டை எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

எனவே, எமக்கு சாதகமான பதில் கிடைக்காதவரை இந்த மறியல் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

ஏனைய வலயக் கல்விப் பணிமனைகளின் செயற்பாடுகளும் முடக்கப்படும் என்றார் அவர். (1-13)

# மஹேலவின் நெறிப்படுத்தலில் இலங்கையணி 'திரில்' வெற்றி

## தென்னாபிரிக்காவிற்கெதிரான டெஸ்ட் தொடரை வெள்ளையடித்தது




கொழும்பு, ஓகஸ்ட் 09

தென்னாபிரிக்காவிற்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் பரபரப்பான ஐந்தாவது நாள் ஆட்டத்தில் இலங்கையணி ஒரு விக்கெட் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றி பெற்றது. இவ்வெற்றி மூலம் டெஸ்ட் தொடரை 2-0 என்ற ரீதியில் கைப்பற்றி தென்னாபிரிக்காவிற்கு வெள்ளையடித்தது இலங்கையணி.

352 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இலங்கையணி ஐந்தாம் நாள் ஆட்டத்தை 262-5 என்ற நிலையில் ஆரம்பித்தது. மேலும் விக்கெட்டுகளை இழக்காமல் வெற்றி பெறலாம் என்ற நினைப்பிலிருந்த இலங்கையணிக்கு அதிர்ச்சி கொடுத்தார் அன்ட்ரூ ஹோல். பிரசன்ன ஜெயவர்த்தனவை எல்.பி.டபிள்யூ முறையில் வெளியேற்றி தனது அணிக்கு நம்பிக்கையளித்தார்.

எனினும் பின்னர் இணைந்த மஹேல - மஹரூப் ஜோடி அணியை வெற்றி நோக்கி வழிப்படுத்தினர். ஒருமுனையில் மஹ்ரூப் நிதான ஆட்டத்தைத் தொடர்ந்தார். மறுமுனையில் மஹேல அடிக்க வேண்டிய பந்துகளை பவுண்டரி மற்றும் சிக்ஸராக மாற்றினார். தொடர்ந்து தனது திறமையை வெளிப்படுத்திய மஹேல (123) வெற்றிக்கு 11 ஓட்டங்கள் தேவையென்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த வாஸ் (4), முரளி (2) ஆகியோரை அன்ட்ரூ ஹோல் வெளியேற்ற ஆட்டம் பரபரப்பானது. வெற்றிக்கு இரண்டு ஓட்டங்கள் தேவையான நிலையில் களமிறங்கினார் லசித் மலிங்க. வெற்றிக்கான ஓட்டத்தை மலிங்க பெற்றுக் கொடுக்க இலங்கையணி ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அத்துடன் முதன்முதலாக தென்னாபிரிக்காவிற்கெதிரான டெஸ்ட் தொடரை வழித்துத்துடைத்தது. டெஸ்ட் வரலாற்றில் ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வெல்வது இது 11 ஆவது முறையாகும். அத்துடன் டெஸ்ட் ஆட்டமொன்றில் நான்காவது இன்னிங்ஸில் துரத்திப்பிடித்து இலங்கையணி வெற்றியடைந்த உயர்ந்த ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். ஆறாவது தடவையாக நான்காவது இன்னிங்ஸ் ஓட்ட எண்ணிக்கையை இலங்கையணி துரத்திப்பிடித்து வெற்றியடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இவ்வாட்டத்தின் ஆட்டநாயகன் விருதை மஹேல ஜெயவர்த்தனவும், தொடர்நாயகன் விருதை முரளிதரனும் தட்டிச் சென்றனர். (க)

# கல்வியியற் கல்லூரி டிப்ளோமாதாரிகளில் 12 பேருக்கு நாளை நேர்முகப் பரீட்சை

வலி.வடக்கு,ஓக.9

கல்வியியற் கல்லூரி டிப்ளோமாதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதற்காக நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு சமுகம் தராதவர்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

கீழ்க்குறிப்பிடப்படும் டிப்ளோமாதாரிகளுக்கான நேர்முகப்பரீட்சை நாளை வியாழக்கிழமை கனகரத்தினம் ம.ம.வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. என யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

ஆர்.யாழினி (ஆரம்பக் கல்வி), எஸ்.செல்வக்குமாரி (ஆரம்பக்கல்வி), க.கலையழகன் (விஞ்ஞானம்), சி.மோகனதாஸ் கணிதம், த.வினோதினி (ஆங்கிலம்), க.திரவியகுமார் (நூலக விஞ்ஞானம்), எஸ்.சர்வேஸ்வரன் (கணிதம்), எஸ்.ஜெயரூபி (மட்டக்களப்பு), எஸ்.ஸ்ரீதரன் (மட்டக்களப்பு), பி.சுபாஜினி (மட்டக்களப்பு), பா.நிதர்சினி (நூலக விஞ்ஞானம்), ரி.மயூரா (மட்டக்களப்பு).

சம்பந்தப்பட்ட அனைவரும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட ஆவணங்களுடன் வருகைதருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (3-204-86)

# நுண்கலைத்துறையில் இன்று சிரமதானம்

யாழ்ப்பாணம்,ஓக.9

யாழ். பல்கலைக்கழகத்தின் மருதனார் மடம் இராமநாதன் நுண்கலைத்துறையினர் இன்று புதன்கிழமை சிரமதானப்பணி ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இவர்கள் சிரமதானம் மூலம் வளாகத்தைத் துப்புரவு செய்யவுள்ளனர் என்றும் - இதில் இராமநாதன் நுண்கலைத்துறை மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறும் - கேட்கப்பட்டுள்ளது. (1-203)



கடந்த ஞாயிற்றுக்கிழமை மூதூர் கிழக்குப் பகுதிமீது மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் கொல்லப்பட்ட சிலரின் சடலங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

## தொண்டர் அமைப்புகளின் பணி பற்றிய வரலாற்றில் கறுப்புப் பக்கம் இப்போது

மூதூர் நகரில் அரச சார்பற்ற பிரெஞ்சுத் தொண்டு நிறுவனம் ஒன்றின் சார்பில் பணிபுரிந்த பதினைந்து அப்பாவித் தமிழர்கள் மோசமான முறையில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தேசிய ரீதியில் மட்டுமல்லாமல், சர்வதேச ரீதியிலும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

"ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற மக்களுக்கு அரும்பணியாற்றி வந்த தொண்டு நிறுவனப் பணியாளர்கள் இவ்வாறு கொடூரமான முறையில் படுகொலையுண்டமை குறித்து அதிர்ச்சியும், ஆழ்ந்த வேதனையும் அடைந்துள்ளேன்." - என்று கூறியிருக்கின்றார் இந்து சமுத்திர ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீட்பு முயற்சிகளுக்கான ஐ.நா.வின் விசேட தூதுவரும், முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியுமான பில் கிளின்டன்.

"இலங்கையில் மனிதநேயப் பணியில் ஈடுபட்டிருக்கும் அமைப்புகளின் வரலாற்றில் கறுப்புப் பக்கத்தில் பதியப்பட்ட மிக மோசமான ஒரு நிகழ்வு இது." - என்று அகதிகளுக்கான ஐ.நா.தூதரகமும், சிறுவர் பாதுகாப்பு நிதியமும் வேதனையுடன் சுட்டிக் காட்டியிருக்கின்றன.

"மூதூர் மக்களுக்கு அரும் பணியாற்றிக் கொண்டிருந்த இந்தத் தொண்டு நிறுவன ஊழியர்கள் வேண்டுமென்றே படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள்." - என செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் திருகோணமலை வதிவிடப் பிரதிநிதி தெரிவித்திருக்கின்றார்.

பிரெஞ்சுத் தொண்டு நிறுவனப் பணியாளர்கள் கொல்லப்பட்டமையை "பயங்கரமான, அதே நேரம் கோழைத்தனமான படுகொலைகள்" - என பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் பிலிப்பி டொஸ்ட் பிளேஸி கண்டித்திருக்கின்றார்.

இந்தப் படுகொலைகளின் பின்னணியில் உள்ள உண்மைகளை அம்பலப்படுத்துவதற்கு உதவுமாறு ஐ.நா. சபையையும், செஞ்சிலுவை அமைப்பையும் சம்பந்தப்பட்ட பிரெஞ்சு தொண்டு நிறுவனம் கேட்டிருக்கின்றது.

கொல்லப்பட்ட நான்கு பெண்கள் உட்பட பதினைந்து ஊழியர்களும் தாங்கள் சார்ந்த தொண்டர் அமைப்பான 'பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின்' ரி-சேர்ட்கள் அணிந்திருந்த நிலையிலேயே, படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர். மிகக் குறுகிய தூரத்தில் வைத்து சுடப்பட்டு முகம் குப்புறக் கிடக்கும் நிலையில் தொண்டு நிறுவனத்தின் அலுவலகத்துக்குள் அவர்களது சடலங்கள் காணப்பட்டிருக்கின்றன.

ஆகவே, அவர்கள் அனைவரும் சம்பந்தப்பட்ட தொண்டர் நிறுவனப் பணியாளர்கள் என்பது திட்டவட்டமாகத் தெரிந்த நிலையிலேயே அவர்களைக் கொலையாளிகள் இவ்வாறு வேட்டையாடியிருக்கின்றார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இந்தப் படுகொலைகளுக்குக் கண்கண்ட சாட்சி ஏதும் இதுவரைக் கிடைக்காததால் படுகொலை செய்தோர் இவர்கள்தான் என்று திட்டவட்டமாகச் சுட்டிக்காட்டுவது கஷ்டமானதாக இருக்கலாம். ஆனால், தமிழர் பிரதேசத்தில் சர்வதேச மற்றும் உள்ளூர்த் தொண்டர் அமைப்புகளின் பங்கு, பணி குறித்து தென்னிலங்கை அரசியல் வானில் நிகழும் கருத்தியல் நிலைப்பாட்டின் பின்னணியில் இப்படுகொலைகளை நோக்குவோமானால், சூத்திரதாரிகள் யார் என்பதை ஊகித்து - உய்த்து - அறிந்து கொள்வதற்கு அவ்வளவு நேரம் செல்லாது.

தமிழர் தாயகப் பிரதேசத்தில் பணியாற்றும் அரச சார்பற்ற, சர்வதேச மற்றும் உள்ளூர்த் தொண்டு நிறுவனங்கள் தொடர்பாகத் தென்னிலங்கையில் அரசுத் தரப்போடு கைகோர்த்து நிற்கும் பௌத்த - சிங்களப் பேரினவாதிகள் வெளிப்படுத்தி வந்த மிகச் சூடான- இனக்குரோதப் போக்குடைய - கருத்துக்கள் இங்கே கவனிக்கப்பட வேண்டும். இந்தத் தொண்டர் நிறுவனங்களில் பலவும் புலிகளுக்கே உதவி வருகின்றன என அவர்கள் கூறி வந்தனர். யுத்தத்தினாலும், ஆழிப்பேரலையினாலும் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு இத்தொண்டு நிறுவனங்கள் உதவுவதை விரும்பாத இந்நபர்கள், இந்தத் தொண்டு நிறுவனங்களின் பணிகளை வடக்கு - கிழக்கில் முடக்குவதற்கு நிர்வாக, செயல் ரீதியில் எடுத்து வந்த நடவடிக்கைகளை நாடே அறியும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மூதூர் மக்களுக்கு அவசர - அவசிய - மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காகச் சென்ற - நிவாரணப் பொருள்கள் அடங்கிய - வாகன அணி சில தினங்களுக்கு முன்னர் சேருவிலவில் தடுக்கப்பட்டதும், தாக்கப்பட்டதும் வெளியே தெரியாத விடயங்கள் அல்ல.

தொண்டு நிறுவனப் பணியில் ஈடுபட்டிருக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழக ஊழியர்கள் ஏழு பேர் கடத்தப்பட்டுக் காணாமல் போனமையும், மேலும் பலர் சுட்டுக் கொல்லப்பட்டமையும், புனர்வாழ்வுக் கழகப் பணிமனைகள் பலவும் தொடர் தாக்குதல்களுக்கு இலக்காகி வருகின்றமையும் கூட இங்கு கவனிக்கத்தக்கவை.

தொண்டர் அமைப்புகளுக்கு எதிராக - குறிப்பாகத் தமிழர் தாயகத்தில் இயங்கும் அரச சார்பற்ற அமைப்புகளுக்கு எதிராக - அரசியல் ரீதியிலும், நடைமுறை மற்றும் சட்ட ஏற்பாடுகளுக்கு அமையவும், பல சமயங்களில் சட்டத்துக்கு முரணாகவும் இழைக்கப்பட்டு வரும் அழுத்தங்கள், நெருக்குவாரங்கள், மிரட்டல்கள், வன்முறைக் கட்டவிழ்ப்பு ஆகியவற்றின் வரிசையில் உச்சமாக இந்தப் பதினைந்து பேர் படுகொலைகளும் இடம்பெற்றிருக்கின்றன.

"இந்தப் படுகொலைகள் குறித்து நீதி விசாரணைகள் நடக்கும்; கொலையாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்" - என்றெல்லாம் இலங்கை அரசுத் தரப்பில் அடித்துக் கூறப்படுகின்றது. சமாதானம் தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலை நகரில் ஐந்து அப்பாவித் தமிழ் மாணவர்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டமை, அல்லைப்பிட்டிப் படுகொலைகள், மன்னார் - வங்காலைப் படுகொலைகள், 'உதயன்' அலுவலகம் மீதான தாக்குதல் மற்றும் படுகொலைகள் போன்ற வன்முறைகளை அடுத்துக் கூறப்பட்ட சமாதானம் போன்றதுதான் இதுவும்.

அந்த விடயங்களின் விசாரணைகளில் காட்டப்பட்ட அதே உதாசீனப் போக்கும், மெத்தன நடவடிக்கையும், குற்றவாளிகள் தப்புவதை உறுதிப்படுத்தி, அவர்களைக் 'காவாந்து' பண்ணும் செயற்பாடும் இந்தப் பதினைந்து பணியாளர்கள் படுகொலை விடயத்திலும் கூட தவறாது கடைப்பிடிக்கப்படும் என்பதற்கான முன்னறிவித்தலாக அரசின் இந்தச் சமாளிப்பு அறிவிப்பைக் கருதலாம். அதில் தப்பில்லை.



யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் (ஸ்ரான்லிக் கல்லூரி) 'நிக்கொட்' திட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடத்தின் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில், 'நிக்கொட்' திட்டப் பிரதித் திட்டப்பணிப்பாளர் க.நவரட்ணராஜா நாடாவெட்டி ஆய்வுகூடத்தைத் திறந்துவைப்பதையும் கல்லூரி அதிபர் வி.மாணிக்கம் தலைமையுரை நிகழ்த்துவதையும் திறந்துவைக்கப்பட்ட ஆய்வுகூடத்தையும் படங்களில் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன்)*

# தொண்டுநிறுவனப் பணியாளர் கொலை; ஆஸ்திரேலிய அரசு கடும் கண்டனம்

இலங்கையில் நடந்துகொண்டிருக்கும் வன்முறைகளையும் பிரெஞ்சு தொண்டு நிறுவனமொன்றின் உள்ளூர் பணியாளர்கள் படுகொலைசெய்யப்பட்டுள்ள சம்பவத்தையும் ஆஸ்திரேலிய அரசாங்கம் கடுமையாகக் கண்டித்துள்ளது.

ஆஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர் அலெக்சாண்டர் டௌனர் விடுத்துள்ள அறிக்கையொன்றில் இக்கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது.

தாமதமின்றி அமைதிச் செயற்பாடுகளில் பிணக்கில் சம்பந்தப்பட்டுள்ள இரு தரப்பினரையும் ஈடுபட்டு சகல இன மக்களும் பயனடையும் வகையில் பேச்சுவார்த்தை மூலம் நிலைத்து நிற்கக்கூடிய தீர்வினை ஏற்படுத்துவதற்கு உழைக்கும்படி ஆஸ்திரேலிய அமைச்சர் வற்புறுத்தியுள்ளார்.

**10 லட்சம் டொலர் மனிதாபிமான நன்கொடை**

மூதூரிலும் ஏனைய பகுதிகளிலும் அண்மைக்கால வன்முறைகளால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஆஸ்திரேலிய அரசு 10 லட்சம் டொலர் மனிதாபிமான உதவியை முதல்கட்டமாக வழங்கியுள்ளது.

இடம்பெயர்ந்துள்ள 6 ஆயிரம் மக்களுக்கும் குடிதண்ணீர், நுளம்பு வலைகள், சமையல் பாத்திரங்கள் மற்றும் சுகாதாரப் பொருள்களை வழங்குவதாக இந்த உதவி அமையும்.

'ஆஸ்எயிட்' எனப்படும் ஆஸ்திரேலிய சர்வதேச உதவி முகவர் அமைப்பு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக 5 லட்சம் டொலர் பெறுமதியான உதவிகளை மோதலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமுகமாக வழங்கவிருக்கின்றது. (ப)

## றோட்டறி ஆளுநர் இன்று யாழ். விஜயம்



யாழ்ப்பாணம்,ஓக.9

றோட்டறிக்கழகத்தின் மாவட்ட ஆளுநர் ஜி.டி.பொபி சேனாவீர அவரது பாரியார் ஆன்நினா சேனாவீர சகிதம் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற் கொண்டு இன்று யாழ். வருகின்றனர்.

இவர்களுடன் 3220ஆம் மாவட்டத்தின் செயலாளர் றோட்டேரியன் திரு மற்றும் ஆளுநரின் உதவியாளர் சாலித்த வட்டபுளுவ ஆகியோரும் வருகை தரவுள்ளனர்.

யாழ். றோட்டறிக்கழகத்தின் புதிய தலைவரின் பதவியேற்பு வைபவமும் உறுப்பினர் ஒன்றுகூடல் நிகழ்வும் இன்று புதன் கிழமை மதியம் ஒரு மணிக்கு சிவகுருநாதர் வீதியிலுள்ள உதயன் விருந்தினர் விடுதியில் நடை பெறவுள்ளன.

யாழ்.றோட்டறிக்கழகத்தின் புதிய தலைவராக என்.சரவணபவன் பொறுப்பேற்கும் இந்த நிகழ்வில் ஆளுநர் தம்பதிகள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிப்பர்.(204)

# பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைக்கு நிபந்தனையற்ற ஆதரவு தருவோம்!

### ஜனாதிபதியிடம் ஹெலஉறுமய தெரிவிப்பு

கொழும்பு,ஓக.9

பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எடுக்கும் எந்தவிதமான முடிவுகளுக்கும் நிபந்தனையற்ற முறையில் ஆதரவு வழங்க ஜாதிக ஹெல உறுமய கட்சி முடிவு செய்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதியிடம் ஹெல உறுமயக் கட்சியினர் சந்திப்பொன்றை நடத்தினர்.

வடக்கு - கிழக்குப் பிரதேசத்தின் தற்போதைய நிலைகுறித்து நடத்தப்பட்ட இச்சந்திப்பின்போதே ஹெல உறுமயக் கட்சியினர் தமது முடிவை வெளியிட்டனர்.

சேருநுவர மக்களின் அடிப்படைத் தேவைகளைக் கூடப் புலிகள் இப்போது இல்லாமல் செய்துள்ளனர். பிரதேச மக்களைப் பாதுகாக்கும் வகையில் அரசு மனிதாபிமான அடிப்படையிலான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதனையே சிலர் யுத்தம் தொடங்கி விட்டதாகக் கூறுகின்றனர்.

மாவிலாறு அணைக்கட்டைப் புலிகள் இயக்கத்தினர் மூடிவைத்துள்ளமையால் 35 ஆயிரம் ஏக்கர் விவசாயச் செய்கை அழிவுறும் ஆபத்தை எதிர்கொண்டிருக்கின்றது. ஆயிரக்கணக்கான மக்கள் நீரின்றிப் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இவற்றில் ஊடகங்களோ சர்வதேச சமூகமோ கவனம் செலுத்தாத நிலைமை காணப்படுகின்றது - என்று ஹெல உறுமயவினர் மேலும் தெரிவித்துள்ளனர். (202)

## மட்டு. நகரின் பாதுகாப்பு அதிரடிப்படைகள் வசம்

ஏறாவூர்,ஓக.9

மட்டக்களப்பு நகரின் பாதுகாப்பு நடவடிக்கைகளை நேற்றுமுன்தினம் முதல் விசேட அதிரடிப்படையினர் பொறுப்பேற்றுள்ளனர். மட்டக்களப்பு நகருக்கு வடக்கே சந்துருக்கொண்டான் வரையிலான படைமுகாம்கள் அனைத்திலிருந்தும் இராணுவத்தினர் விலக்கிக்கொள்ளப்பட்டு விசேட அதிரடிப்படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை - மயிலம்பாவெளி, கொம்மாந்துறை மற்றும் வாழைச்சேனை ஆகிய பகுதிகளில் இராணுவத்தினர் தொடர்ந்தும் கடமைகளில் அமர்த்தப்பட்டுள்ளனர் என உள்ளூர் பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவாஞ்சிக்குடிப் பகுதி வரையிலான பிரதேசங்களில் மட்டுமே இதுவரை விசேட அதிரடிப்படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## கொத்தியாலடி மயானம் செல்வோர் அசௌகரியம் எதிர்கொள்வதாகப் புகார்!

சுன்னாகம், கொத்தியாலடி இந்து மயானம் உரிய பராமரிப்பின்றிக் காணப்படுவதால் அங்கு செல்வோர் பெரிதும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகக் கூறப்படுகிறது.

மயானப் பகுதி துப்புரவு செய்யப்படாதிருப்பதுடன், மண்டபமும் சீரற்றுக் காணப்படுவதாகவும் -

இறந்த விலங்குகளின் கழிவுப் பொருள்கள் காரணமாக மயானப் பகுதி துர்நாற்றத்துடன் இருப்பதாகவும் - சுட்டிக்காட்டப்படுகின்றது.

மயானப்பகுதியில் கட்டாக்காலி நாய்களது தொல்லை இருப்பதாகவும் - கூறப்பட்டது.

மயான அபிவிருத்திக்கென ஒரு சபை அமைக்கப்பட்டுள்ளதாகவும் இச்சபை சுற்றுப்புறப் பாதுகாப்பையும் உரிய வசதிகளையும் செய்துதர வேண்டும் என்றும் -

மயானத்தைப் பயன்படுத்தும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### நாளை

ஆடி 25
வியாழக்கிழமை
10.08.2006
திதி : பிரதமை
பிற்பகல் : 03.21
நட்சத்திரம் : அவிட்டம்
பிற்பகல் : 05.37
சுபநேரம் : 07.34 - 09.04
ராகுகாலம் : 01.34 - 03.04

### உதயவாக்கு

எமது வாழ்வை மேன்மையுறச் செய்துகொள்ளமுடியும் என்பதைச் சான்றோரின் வாழ்க்கை முறைகள் எமக்கு நினைவூட்டுகின்றன. காலம் என்ற மணல் தரையில் அவர்களின் சுவடுகள் காணக்கிடக்கின்றன.

*- ஹென்றிவேட்ஸ்வேர்த்*

## பண்டத்தரிப்பு வெள்ளவாய்க்கால் துப்புரவு

வலி.தென்மேற்கு,ஓக.9

பண்டத்தரிப்பு பிரதான வீதியில் உள்ள வெள்ளவாய்க்காலும் கழிவு நீர் வாய்க்காலும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் கடந்த வாரம் துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

பண்டத்தரிப்பு கீரிமலை வீதியிலிருந்து செல்லும் இவ்வாய்க்காலில் தேங்கிக் கிடந்த மேலதிக மணல் வெட்டி அகற்றப்பட்டுள்ளது.

இதனால், மாரி மழைகாலத்தில் வெள்ள நீர் இலகுவாக வழிந்தோடு வதற்கு வசதி ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கம் இந்த வாய்க்காலைப் புனரமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
26.06.1941

மறைவு
14.08.2000



அமரர்

## திரு. தம்பிப்பிள்ளை சிவஞானசுந்தரம்

(இளைப்பாறிய பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டிக்கிளை, யாழ்ப்பாணம்)

ஆண்டுகள் ஆறு ஓடிமறைந்தாலும் ஆறாது எம் துயரம்
ஓங்கிய நீள் நெடு நினைவாய் உங்கள் நினைவுகள் - நாளும் எம்முடன்....!
நீத்தல், வாழ்வின் முடிவு அல்ல; புதியதொரு புனித வாழ்வின் தொடக்கம்.
உங்கள் நினைவுகளில் நாங்கள் வாழ்வதால்
இந்த அகிலம் உள்ள வரை உங்கள் வாழ்வு தொடரும்....!

பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
திருநெல்வேலி.

- குடும்பத்தினர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழையும் இல்லை; கிணறுகளில் நீர்மட்டமும் குறைகிறது
# வலி.தென்மேற்கில் விவசாயச் செய்கையில் பெரும் பாதிப்பு

வலி.தென்மேற்கு ஓக.9

வலி.தென்மேற்கின் பண்டத்தரிப்பு, மாதகல் மற்றும் சில்லாலை பகுதிகளில் கடந்த 3 மாதகாலமாக நிலவிவரும் கடும் வரட்சி காரணமாக கிணறுகளில் நீர் மட்டம் குறைந்துள்ளது.

இதனால் இப்பகுதியிலுள்ள விவசாயிகள் தங்கள் வயற்காணிகளில் மேற்கொள்ளப்பட்ட பயிர்களுக்கு நீர் இறைப்பதில் பலத்த சிரமங்களை அனுபவித்து வருகின்றனர் எனச் சுட்டிக் காட்டப்படுகிறது.

இதேவேளை - எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் காலபோக நெல் விதைப்பை ஆரம்பிப்பதற்காக ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் இப்பகுதி விவசாயிகள் தங்கள் வயற்காணிகளை உழுது பண்படுத்தி எருவிட்டு தயாராக வைத்திருப்பது வழக்கம்.

ஆனால், இம்முறை இதுவரை மழை பெய்யாததால் தங்கள் வயற்காணிகளை உழுவதற்கு முடியாத நிலையில் விவசாயிகள் இருந்து வருகின்றனர்.

இதேவேளை - ஆடு, மாடுகள் மேய்வதற்கும் புற்கள், பூண்டுகள் காணிகளில் இல்லாமல் இருக்கின்றது. இப்பகுதியிலுள்ள சிறிய குளங்களிலும் குட்டைகளிலும் நீர் முற்றாக வற்றியுள்ளது. இதனால் கால்நடைகளும் நீர் அருந்த முடியாது சிரமப்படுவதை அவதானிக்க முடிகின்றது. (எ-135)

## முன்பள்ளி மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு உதவி

தென்மராட்சி,ஓக.9

வறுமை நிலையில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த முன்பள்ளிச் சிறார்களின் கல்வி அபிவிருத்திக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகம் உதவிகளை வழங்கவுள்ளது.

இவ்வாறான சிறார்களின் விவரங்களை வழங்குமாறு தென்மராட்சிப் பிரதேச முன்பள்ளிகளின் ஆசிரியர்களைக் கழகத் தலைவர் கேட்டுள்ளார். [illegible] முன்பள்ளிச் சிறார்களின் ஏனைய தேவைகள் பற்றிய விவரங்களை அறிவித்தால் அதற்கான உதவிகளை வழங்க ஏற்பாடு செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (117)



ஊர்காவற்றுறை பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் புனரமைப்புச் செய்யப்பட்ட கட்டடத்தொகுதி அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இதுதொடர்பாக இடம்பெற்ற நிகழ்வில், தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன் மங்கள விளக்கேற்றுவதையும், கட்டடத்தொகுதியை யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (பனம்பொருள்) சி.ஐயாத்துரை நாடா வெட்டித் திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம். சங்கத்தின் தலைவர் தீ.அ.பெர்னாண்டோ, பொது முகாமையாளர் எஸ்.யேசுராஜன் ஆகியோரும் படத்தில் உள்ளனர். *(படம்: ஊர்காவற்றுறைச் செய்தியாளர்)*

## காலங்கடந்த பிறப்புப் பதிவுக்கு நூற்றுக்கணக்கானோர் விண்ணப்பம்

தென்மராட்சிஓக.9

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் நடத்தப்பட்ட காலங்கடந்த பிறப்புப் பதிவுக்கு தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமானோர் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

தென்மராட்சி பிரதேசத்தில் இடம்பெற்ற இடம்பெயர்வுகளின் போது பிள்ளைகளின் பிறப்புக்களைப் பதியாதவர்களே தற்போது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

காலங்கடந்த பிறப்புகளைப் பதிவுசெய்து பிறப்புச் சான்றிதழ் பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கழகத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தெரிவித்தார்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் சாவகச்சேரி பதிவுகாரர் க.மோகனராஜலிங்கம் முன்னிலையில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டதாகவும்- அவர் மேலும் கூறினார். (எ-117)

## ஒன்றுகூடல்

மெதடிஸ்த திருச்சபையின் யாழ். சேகரவாலிபர் ஐக்கியத்தினர் நடத்தும் நற்செய்தி ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு அச்செழு நல்லாயன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பருத்தித்துறை மெதடிஸ்த சபையைச் சேர்ந்த குரு வண. ந.அருள்நாதனின் சிறப்பு நற்செய்தி உரை இடம்பெறும். (204-190)




## சுவர்ணபூமித் திட்டத்தில் வசிக்கும் மக்கள் சோலைவரி கட்ட ஆவன செய்யவேண்டும்

### யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஓக.9

சுவர்ணபூமிகுடியேற்றத்திட்டத்தின் கீழ் வசிக்கும் மக்களுக்கு வழங்கப்பட்ட காணி உறுதிகளை யழ்.மாநகர சபையில் பதிவு செய்து சோலைவரிகளைக் கட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் - இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.கிளைத் தலைவர் செல்லையா ஜெயரட்ணம் யாழ்.மாவட்ட அரச அதிபருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்விடய தொடர்பாக அரச அதிபருக்கு அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில்-

1971 ஆம்ஆண்டு சுவர்ண பூமி குடியேற்றத் திட்டத்தின் கீழ் யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்திருக்கும் பன்னவெளித் தோட்டத்திலுள்ள காணிகள் பொதுமக்களுக்கு பகிர்தளிக்கப்பட்டன. அக்காணிகளுக்கான அண்மையில் வழங்கப்பட்டன.

இப்பகுதிமக்கள் காணி உறுதிகளை யாழ். மாநகரசபையில் பதிவுசெய்து சோலை வரி கட்டுவதற்காக சென்றனர். அங்கு சோலை வரிப் பதிவேட்டில் வண்ணை சிவன் கோயில் ஆதனம் என பதியப்பட்டுள்ளது எனவும் -

அவை அரசினால் சுவீகரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கியதற்கான பதிவுகள் எதுவும்இல்லை எனவும் கூறி, அதிகாரிகள் காணி உறுதிகளை பதிவுக்கு எடுக்காது திருப்பி அனுப்பிவிட்டனர்.

இதனால்மக்கள் காணி உறுதி வழங்கப்பட்டும் சோலைவரி கட்டமுடியாதுள்ளது என விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேபோன்று தந்தை செல்வாபுரம், கண்ணகபுரம், பொம்மைவெளி, நாவாந்துறை போன்ற குடியேற்றத்திட்ட மக்களும் சிரமம் அடையும் நிலை உருவாக்கியுள்ளது.

மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தடுத்து சோலை வரி கட்ட உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரதி யாழ்.பிரதேச செயலருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (204)

## பாணாவெட்டி ஆலயத்துக்கு ஒரு லட்சம் ரூபா நிதியுதவி

வலி.தென்மேற்கு,ஓக.9

மாதகல் பாணாவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் புனருத்தாரண திருப்பணி வேலைகளை மேற்கொள்வதற்காக இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஒரு லட்சம் ரூபாவை அண்மையில் வழங்கியுள்ளது.

திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் இதற்கான காசோலையை மேற்படி ஆலயத்தின் பரிபாலன சபையினரிடம் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த யுத்தகால அனர்த்தங்களின்போது இவ்வாலயம் பலத்த சேதத்திற்குள்ளாகியமை குறிப்பிடத்தக்கது. (135)

## கல்லுண்டாய், ஆனைக்கோட்டை வயல்கள் பொதுமக்களால் சிரமதானம் மூலம் துப்புரவு

நவாலி ஓக.9

கல்லுண்டாயிலிருந்து ஆனைக்கோட்டை செல்லும் வீதிகள், வயல்கள் என்பன ஆனைக்கோட்டைப் பகுதி மக்களால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

நீண்ட காலமாக இந்தப் பகுதிகளில் கொட்டப்பட்டு வந்த குப்பைகள் தற்போது அதற்கென ஒதுக்கப்பட்ட பழைய கல்லுண்டாய் உப்பளத்தில் கொட்டப்படுகின்றன.

இதனை அடுத்து ஏற்கனவே கொட்டப்பட்டு வயல்கள், வீதிகள் என்பவற்றில் காற்றினால் பரவப்பட்டுக் கிடந்த பொலித்தீன் பைகள், துணிகள் மற்றும் கழிவுகள் என்பவற்றை ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் வை.சந்திரராசா தலைமையிலான குழுவினர் துப்புரவு செய்துள்ளனர்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் இந்த சிரமதானப் பணியில் இணைந்து கொண்டனர்.

சிரமதானத்தில் ஈடுபட்டவர்களுக்கு குளிர் பானங்கள் மற்றும் உணவு வகைகள் என்பவற்றை விநாயகர் சனசமூக நிலையத்தினர் வழங்கினர்.

இந்தச் சிரமதான நடவடிக்கை மூலம் நீண்ட காலமாக சுகாதாரத்திற்கு பங்கம் ஏற்படுத்தி வந்த இந்தப் பகுதி தற்போது புனித பூமியாக காட்சியளிப்பதுடன், மாலை வேளையில் மக்கள் இங்கு பொழுது போக்குவதையும் காணமுடிகிறது. (எ-100)



*ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் கல்விகற்று கடந்த ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் தமது வித்தியாலயத்துக்கு ஒரு தொகுதி தளபாடங்களை அன்பளிப்புச் செய்துள்ளனர். இது தொடர்பாக நடைபெற்ற நிகழ்வில் தளபாடங்களுடன் அவற்றை அன்பளிப்புச் செய்த மாணவர்கள் நிற்பதை படத்தில் காணலாம். (படம்: வலிவடக்குச் செய்தியாளர்)*

## கலாபூஷண விருதுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஓக.9

கலாபூஷணம் விருது வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கத்தால் வழங்கப்படும் இந்த விருதுக்கு பதுறை சார்ந்த கலைஞர்களும் விண்ணப்பிக முடியும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தத்தமது பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் - நல்லூர் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த கலைஞர்களை எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னரும் -

யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் பிரிவுக்கலைஞர்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னரும் - கலாபூஷண விருது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்கள் கேட்டுள்ளனர். (எ-204)

## மானிப்பாய் அறநெறிப் பாடசாலை மாணவரின் தேவாரம், அறநெறிப் போட்டி முடிவுகள்

மானிப்பாய்,ஓக.9

சுந்தரமூர்த்திநாயனாரின் குருபூசையை முன்னிட்டு மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய பரிபாலனசபையினரால் அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட தேவாரம் மற்றும் வினாடிவினாப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

போட்டிகளில் முறையே முதன் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

**தேவாரம்:**

*பாலர்பிரிவு:* ஜெ.கௌதமி (உடுவில் மகளிர் கல் லூரி), இ.அபிராமி (மானிப்பாய் சத்தியசாயி பாடசாலை), ஜ.கம்ஷாயினி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை).

*கீழ்ப்பிரிவு:* கி.கிருஷ்ணவேணி (உடுவில் மகளிர் கல்லூரி), பா.விதுஷன் (மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை), ப.மயூரன் (மானிப்பாய் சத்தியசாயி பாடசாலை).

*ஆரம்பப்பிரிவு:* செ.சங்கவி (சங்குவேலி அ.த.க. பாடசாலை), ர.கேதுஷா (சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலை), ம.சாருஜன் (மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை).

**வினாடிவினாப் போட்டி**

*கீழ்ப்பிரிவு:* ச.சுலோசனா (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை), ர.கிருஷாந்தி (மானிப்பாய் சத்தியசாயி பாடசாலை), ம.ஜென்சிகா (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை).

*[illegible]ப்பிரிவு:* ம.ஜனோதீபன் (யாழ். இந்துக் கல்லூரி), இ.கவிதினி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), அ.பிரியங்கா (உடுவில் மகளிர் கல்லூரி), சி.பிரதீபா (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை).

*மேற்பிரிவு:*

த.நந்தினி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை), நா.கார்த்திகா (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பார்டசாலை), சி.கிருத்திகா (உடுவில் மகளிர் கல்லூரி).

*அதிமேற்பிரிவு:* யோ.நிரூபிகா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), வி.சுயாந்தா (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), நா.தயாமுனி (உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை), சி.அனோஸ்ரிபன் (உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை). (எ-90-204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமான தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும்

வெளியீடு 22

# புலமைப்பரிசில் பரீட்சை
# மாதிரி வினாப்பத்திரம்

திரு.வே. அன்பழகன் - யாழ்ப்பாணம்.

## வினாத்தாள் II

நேரம் 1 மணி 15 நிமிடங்கள்

01. கீழுள்ள பந்தியை வாசித்து 1 முதல் 27 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

வீதி வழியே மான் போலத் துள்ளி ஓடி வந்த பன்னிரண்டு வயதுச் சிறுமியை காற்றாய் பறந்து வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியது. அவள் இரத்த வெள்ளத்தில் மூச்சுப் பேச்சின்றிக் கிடந்தாள். பாதசாரிகள் சிலர் மூச்சை அடைத்திருந்த சிறுமிக்கு முதலுதவி செய்தனர். சிலர் மோட்டார் சைக்கிள் ஓட்டுநரைத் தாறுமாறாக ஏசினர். தந்தையை இழந்த சிறுமியின் தாய் தன் ஒரேயொரு மகளைக் காணத் தலைவிரிகோலமாக ஓடி வந்தாள்: செய்வதறியாது திகைத்தாள். அப்பொழுது அவ்வழியால் வந்த செஞ்சிலுவைச் சங்க வாகனம் அவளுக்கு கை கொடுத்தது. அதிலிருந்தவர்கள் சிறுமியையும் தாயையும் ஏற்றிக்கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தனர்.

1. மோட்டார்ச் சைக்கிளின் வேகத்தினை எதற்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது?
   ...........................................................
2. பந்தியிலுள்ள உவமைத் தொடர் எது?
   ...........................................................
3. செஞ்சிலுவைச் சங்கம் எத்தகைய நிறுவனம்?
   ...........................................................
4. "காற்றாய் பறத்தல்" என்றால் என்ன?
   ...........................................................
5. "கைகொடுத்தல்" என்றால் என்ன?
   ...........................................................
6. பந்தியில் உள்ள இணை மொழி ஒன்று எழுதுக.
   ...........................................................
7. கணவனை இழந்த அந்தச் சிறுமியின் தாயை எவ்வாறு அழைக்கலாம்?
   ...........................................................

★ ஒத்த கருத்துள்ள சொல் எழுதுக.

8. வீதி ...........................................
9. பாதசாரி ...........................................
10. மருத்துவம் ...........................................
11. ஓட்டுநர் ...........................................

★ எதிர்க்கருத்துள்ள சொல் எழுதுக.

12. கோலம் ...........................................
13. ஏற்றிக்கொண்டு ...........................................

★ பன்மைச் சொல் எழுதுக.

14. ஒன்று ...........................................
15. தாய் ...........................................
16. மோதியது ...........................................
17. வாகனம் ...........................................

18. பந்தியிலுள்ள பெ[illegible] வினைச்சொல் ஒன்று எழுதுக?
   ...........................................
19. பந்தியில் உள்ள ஒன்றன்பால் வினைச்சொல் ஒன்று எழுதுக?
   ...........................................

★ ஆங்கிலச் சொல்லை எழுதுக.

20. பன்னிரெண்டு ...........................................
21. இரத்தம் ...........................................
22. முதலுதவி ...........................................
23. மருத்துவமனை ...........................................

★ கீழ்வரும் ஆங்கிலச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொற்களைப் பந்தியிலிருந்து எழுதுக.

**24. Deer** ...........................................
**25. Wind** ...........................................
**26. Girl** ...........................................
**27. Vehicle** ...........................................

02. பின்வரும் பாடல் வரிகள் அழகு, அன்பு, கருணை, வீரம், தேசப்[illegible] என்பனவற்றினை வெளிப்படுத்துகின்றன. அவை வெளிப்படுத்[illegible] உணர்வினை அப்பாடல்களுக்கு எதிரே உள்ள புள்ளிக்கோட்[illegible] எழுதுக.

1. காலைத்தூக்கிக் கண்ணில் ஒற்றிக்
   கட்டிக் கொஞ்சும் அம்மா ...........................................
2. புள்ளிப் புள்ளி மானே
   துள்ளித் துள்ளி ஓடிவா ...........................................
3. உடலில் உறுதி உடையவரே
   உலகில் உறுதி உடையவராம் ...........................................
4. நண்டின் காலை ஒடிக்காதே
   நாயைக் கல்லால் அடிக்காதே ...........................................
5. இலங்கை எங்கள் தாய் நிலம்
   இணையில்லாத தாய் நிலம் ...........................................

03. கீழ்வரும் வினாக்களிற்குரிய விடையைப் புள்ளிகோட்டில் எழுதுக.

1. 45 ரூபாவுக்கு இரண்டு கொப்பிகள் வாங்கமுடியும் எனில், 225 ரூ[illegible]வுக்கு எத்தனை கொப்பிகள் வாங்கமுடியும்?
   ...........................................
2. சம அளவான 8 தோடம்பழங்களின் நிறை 880 கிராம் ஆகும். அதி[illegible] தோடம்பழங்களின் நிறை யாது?
   ...........................................
3. தந்தையின் வயது மகனின் வயதைப் போன்று 4 மடங்காகும். 6 வருட[illegible]ளுக்கு முன்னர் தந்தையின் வயது 50 ஆக இருந்தது. மகனின் [illegible] போதைய வயது யாது?
   ........................................... வருடங்கள்
4. ஒரு வியாபாரி தன்னிடமிருந்த தேனை 10 மி.லீ. கொண்ட 75 போ[illegible]தல்களிலும், 75 மி.லீ. கொண்ட 80 போத்தல்களிலும் அடைத்[illegible] அவரிடம் இருந்த தேனின் அளவு யாது?
   ...................... லீற்றர் ...................... மில்லிலீற்றர்
5. மாலாவிடம் உள்ள பணத்தைவிட 175 ரூபா கூடுதலாக கமலாவிடம் பண[illegible] உள்ளது. இரண்டு பேரிடமும் உள்ள மொத்த பணம் 475 ரூபா ஆகு[illegible] கமலாவிடம் உள்ள பணம் எவ்வளவு? ......................
   ...................... ரூபா
6. 125 கிராம் தேயிலையின் விலை 4 ரூபா 50 சதம் ஆகும். 750 கிரா[illegible] தேயிலையின் விலை யாது? ......................
7. ஒரு பெட்டியில் 3 டசின் சன்லைட் கட்டிகளை அடுக்கலாம். [illegible] சன்லைட் கட்டிகளை அடுக்குவதற்கு எத்தனை பெட்டிகள் தேவை[illegible]
   ...........................................
8. ஒரு புத்தகத்தின் விலை 14 ரூபா ஆகும். ஒரு பேனையின் விலை [illegible] ரூபா ஆகும். 6 புத்தகங்கள் வாங்கக்கூடிய பணத்திற்கு எத்தனை பேனைகள் வாங்கலாம்?
   ...........................................
9. ஓர் உண்டியலில் 50 சத நாயணங்கள் 25உம், 1 ரூபா நாணயங்க[illegible] 30உம், 2 ரூபா நாணயங்கள் 18உம் இருந்தன. உண்டியலில் இரு[illegible] மொத்தப் பணம் எவ்வளவு?
   ...........................................
10. 350 தோடம்பழங்களில் 2/7 பங்கு அழுகிவிட்டன. மிகுதியாக உ[illegible] நல்ல பழங்கள் எத்தனை? ......................

04. பின்வரும் தாவரங்களைக் கொண்டு வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.

வாழை, நெல், பாகல், ஈரப்பலா, பனை

1. அதிக நீர் வழங்க வேண்டிய தாவரம் எது? ......................
2. வேரின் மூலம் இனம் பெருகும் தாவரம் எது? ......................
3. நீலக்கீழ்த் தண்டுள்ள தர்வரம் எது? ......................
4. பற்றி ஏறும் தாவரம் எது? ......................
5. நீர் வழங்கி வளர்க்கத் தேவையற்ற தாவரம் எது? ......................

05. பின்வரும் பாடல்கள் எதனைப் பற்றிக் கூறுகிறன என்று "அ" ப[illegible]தியிலும் அவற்றை இயற்றியவர்கள் யார்? என்று "ஆ" பந்தியிலும் [illegible]துக.

1. மீன் பாடும் நகரம் - காற்று
   மிதந்து வரும் நகரம் [அ] ......................
   தேன் ஓடும் நகரம் - வளர்
   தென்னை மர நகரம் [ஆ] ......................
2. பாடுபட்டு உழுபவர்
   பலனும் கண்டு தருபவர் [அ] ......................
   நாடு வளர வாழ்பவர் நன்கு
   வாழ்க வாழ்கவே! [ஆ] ......................
3. கல்லும் மலையும் குதித்து வந்தேன் - பெருங்
   காடும் செடியும் கடந்து வந்தேன்
   எல்லை விரிந்த சமவெளியெங்கும் - நான்
   இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்
   [அ] ......................
   [ஆ] ......................

06. பின்வரும் வீதிக் குறியீடுகளின் பெயர்களை எழுதுக.

1)


2)


3)


...................... ...................... ......................

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாய்க்கால் திருத்தப்படாமையால் பயிர்ச்செய்கை தண்ணீரின்றிப் பாதிப்பு

## முத்தையன்கட்டு பிரதேச மக்கள் கவலை

ஒட்டுசுட்டான், ஓக.8

முத்தையன்கட்டு குளத்தின் பிரதான வாய்க்கால் பல ஆண்டுகளாகப் புனரமைப்புச் செய்யப்படாது உள்ளமையால் வருடந்தோறும் கருவேலன்கண்டல், மானுருவி கிராம மக்கள் பயிர்ச்செய்கைக்கான தண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனால் பயிர்ச்செய்கை பாதிக்கப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

முத்தையன்கட்டு குளத்தின் பிரதான வாய்க்கால் மூலமே 6 ஆம், 7ஆம் கண்டங்களாக கருவேலன்கண்டல், மானுருவி ஆகிய கிராமங்களில் மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கைக்கான தண்ணீர் செல்வது வழமை.

தற்போது பல ஆண்டுகளாக இந்த வாய்க்கால் புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் உள்ளமையால் 5ஆம் கண்டம் வரையான பகுதிக்கு மட்டுமே தண்ணீர் செல்கிறது. அதுவும் முழுமையாகச் செல்லவில்லை.

இதன்காரணமாக அக்கிராம மக்களின் வான்பயிர்கள் அழிவடைந்து வருவதுடன் வருடாவருடம் சிறுபோகச் செய்கையும் பாதிக்கப்படுகின்றதென்று மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். உரியவர்கள் இவ்விடயத்தைக் கவனத்திலெடுத்து இக்கிராம மக்களின் நன்மைகருதி குறிப்பிட்ட வாய்க்காலைப் புனரமைப்புச் செய்து தருமாறு மக்கள் கேட்டுள்ளனர். (203-341)



ஐ.நா.உணவு விவசாய நிறுவனம், பூநகரி, தர்மபுரம், பளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மீன்பிடிச் சங்கங்களுக்கு அலுவலக உபகரணங்களையும் கடற்றொழிலாளர்களுக்குத் துவிச்சக்கர வண்டிகளையும் வழங்கியுள்ளன.

பூநகரி கடற்றொழிலாளர் சங்கத்தில் வைத்து ஐ.நா.உணவு விவசாய நிறுவனத்தைச் சேர்ந்த ஆ.சிவானந்தன் பயனாளி ஒருவருக்கு சைக்கிள் வழங்கியபோது எடுக்கப்பட்ட படம் (149)

# ஜேர்மன் நிறுவனம் சிறுவர்களுக்கு உதவி

விசுவமடு, ஓக.9

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது தாய் தந்தையை இழந்த 81 பிள்ளைகளுக்கு ஜேர்மன் வாழ் மக்களின் நிதிமூலம் உடுபுடைவைகள் வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க தலைமைப் பணிமனையில் அ.மரியராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கருத்துரைகளினை முல்லைத்தீவு மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர். மா.றங்கன் ஜேர்மன் வாழ். மக்களிடம் இருந்து நிதியினை பெற்று வந்த வவுனியாவைச் சேர்ந்த சத்தியமூர்த்தி ஆகியோர் நிகழ்த்தினர். (203-402)

# தமிழ்ச் சங்க மனனப் போட்டியில் வெற்றிபெற்றோர் கௌரவிப்பு

புதுக்குடியிருப்பு, ஓக.9

முல்லைத்தீவு மாவட்ட தமிழ்ச் சங்கத்தால் நடத்தப்பட்ட ஆத்திசூடி, கொன்றை வேந்தன், திருக்குறள் ஆகியவற்றை மனனம் செய்யும் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

கோட்ட ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் நடத்தப்பட்ட இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்கள் இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

கோட்ட மட்டத்தில் வெற்றிபெற்ற 62 மாணவர்களும், மாவட்ட ரீதியாக வெற்றி பெற்ற 12 மாணவர்களும் இந்நிகழ்வில் பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்விற்குப் பிரதம அதிதியாக முல்லைத்தீவு மேலதிக அரச அதிபர் க.பார்த்தீபன் கலந்து கொண்டு மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கினார்.

முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் முல்லைத்தீவு கல்விக்கழகப் பொறுப்பாளர் சுடர் உட்படப் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

தமிழீழ நிதித்துறையினரின் அனுசரணையுடன் பரிசில்கள் வழங்கப்பட்டன. (203-353)

## வன்னிச் செய்திகள்

# இடம்பெயர்ந்து வன்னிவந்த மக்களுக்கு உதவ அரச சார்பற்ற நிறுவனங்களும் முன்வரவேண்டும்

## முல்லைத்தீவு அரச அதிபர் வேண்டுகோள்

புதுக்குடியிருப்பு, ஓக.9

தற்போது நிலவும் அசாதரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து வன்னி வந்துள்ள மக்களது தேவைகளை உடனடியாக செய்து கொடுக்க, அரச சார்பற்ற நிறுவனங்களும் முன்வர வேண்டும் - என்று முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த முதலாம் திகதி செயலகத்தில் நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்ட திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான கூட்டம் ஒன்றில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளிடம் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அவர்மேலும் தெரிவித்ததாவது:-

உலர் உணவு நிவாரணங்கள் வழங்குவதற்கு ஏற்கனவே உலக உணவுத் திட்டத்தினர் முன்வந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அடுத்த கட்ட உதவிகளை உடனடியாகச் செய்து கொடுப்பதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வரவேண்டும் என்றார்.

அத்துடன் இக்கூட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களின் புள்ளி விவரங்களையும் அவர் சமர்ப்பித்தார்.

அவர் அங்கு வழங்கிய புள்ளி விவரங்களின்படி உடனடி உதவிகள் தேவைப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 528 என்று தெரிவிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 350 குடும்பங்களும் துணுக்காய் பாண்டியன்குளம் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 350 குடும்பங்களும் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 158 குடும்பங்களும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 166 குடும்பங்களும் குடியேறியுள்ளனர். மொத்தமாக 5 ஆயிரத்து 908 குடும்பங்கள் இடம்பெயர்ந்த போதும் 4 ஆயிரத்து 144 குடும்பங்களுக்கே உலர் உணவு நிவாரணங்கள் வழங்கப்படுகிறது என்றும் ஏனையோருக்கு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (203-353)

# மைதானங்கள் அமைக்கப்படுகின்றன

பரந்தன், ஓக.9

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் ஒட்டுசுட்டான் பிரிவிற்கான பொது விளையாட்டு மைதானம், முத்தையன் கட்டு இடதுகரை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கான விளையாட்டு மைதானம் என்பன அமைக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் மூன்றாம் கண்டம் கிராம வீதியும் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது. ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் சுபாசினி கந்தையா இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் (203-352)

# சின்னச்சாளம்பன் கிராமத்தில் வரட்சியால் தண்ணீர் தட்டுப்பாடு

## இதனால் மக்கள் பெரும் அவதி

ஒட்டுசுட்டான், ஓக.9

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள சின்னச்சாளம்பன் கிராமத்தில் கடும் வரட்சி காரணமாகத் தண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதுடன் கால் நடைகளும் தண்ணீரின்றி அலைந்து திரிகின்றன.

தண்ணீர்த் தட்டுப்பாடு காரணமாக தமது அன்றாடத் தேவைகளுக்குத் தேவையான தண்ணீரைக் கூடப் பெற்றுக் கொள்ளமுடியாத அவலநிலையில் மக்கள் உள்ளனர்.

கிணறுகளில் கூட தண்ணீர் வற்றிக்காணப்படுவதால் இக்கிராம மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதிலும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (203-341)

# கோழிவளர்ப்புப் பயிற்சித்திட்டம் ஆண்டான்குளத்தில் நடைமுறை

பரந்தன், ஓக.9

ஐ.எஸ்.ஓ நிறுவன நிதியுதவியுடன் மன்னார் மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தால் 10 லட்சம் ரூபா செலவில் மன்னார் பாப்பா கோட்டைக் கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட 75 பயனாளிகளுக்கு கோழி வளர்ப்புத் தொடர்பான பயிற்சித்திட்டம் ஒன்று அண்மையில் ஆண்டான்குளத்தில் அமைந்துள்ள மாதிரிப் பண்ணையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இக்கோழிவளர்ப்புத் திட்டம் மிகவும் குறுகிய இடத்தில் குறைந்த மூலதனத்துடன், அதிக பயன்பெறக்கூடிய ஒன்றாகவே உள்ளது.

இதன் பலனைக் கருத்தில் கொண்டு பெண்களை குடும்பத் தலைவர்களாகக் கொண்ட அனைவரும் பயன்பெறக்கூடிய வகையில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் தொடர்ச்சியாக நல்ல இனக் கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்படவுள்ளதுடன் இக்கோழிவளர்ப்புத் தொடர்பான பயிற்சிப் பட்டறைகளும் பெண்களுக்கு நடத்தப்படவுள்ளன.

வறுமைக்கோட்டிற்குட்பட்ட கணவரை இழந்த பெண்கள் உட்பட அனைவரும் இதன் மூலம் மேம்பாடு அடைய முடியும் என்று எதிர்பார்க்கப்படுவதாக சம்பந்தப்பட்டவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-352)

# முல்லைத்தீவு இலங்கை வங்கியின் 67ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு

புதுக்குடியிருப்பு, ஓக.9

முல்லைத்தீவு இலங்கை வங்கியின் 67ஆவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் [illegible] கலந்து கொண்டார்.

இந்நிகழ்வு [illegible] வைப்புச் செய்த வாடிக்கையாளர்களில் சுமார் 20 பேர் குலுக்கல் முறைமூலம் தெரிவுசெய்யப்பட்டு பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்பட்டன.

முன்னாள் முகாமையாளர் எஸ்.விவேகானந்தன் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

இதேவேளை ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த செல்வி [illegible] அகல்யாவுக்கு வங்கிமூலம் 10 [illegible] வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு அதற்கான புத்தகமும் மாணவிக்கு வழங்கப்பட்டது. (203-353)

# கனகபுரம் ம.வியில் சிறுவர்பூங்கா திறப்பு

கிளிநொச்சி, ஓக.9

கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயத்தில் சிறுவர்களுக்கான விளையாட்டுப் பூங்கா ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வித்தியாலய முதல்வர் திலகநாதன் தலைமையில் நடைபெற்ற திறப்புவிழா நிகழ்வில் முதன்மை விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் பத்மநாதன் கலந்து கொண்டார்.

பூங்கா திறப்பு விழாவைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (203-307)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் மீதான இந்தியத்தடை சரியா? விவாதத்திற்குரியது என்கிறார் கருணாநிதி

சென்னை,ஓக.9

விடுதலைப் புலிகள் மீது இந்தியா தொடர்ந்து தடை விதித்திருப்பது சரியா? தவறா என்பது விவாதத்திற்குரியது. எனினும், தடை இருக்கும் வரை அதனை மீறிச் செயற்படுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழக முதலமைச்சரும் தி.மு.க. தலைவருமான மு.கருணாநிதி

சட்டப்பேரவையில் கடந்த திங்கட்கிழமை கேள்விநேரம் முடிந்ததும் காங்கிரஸ் உறுப்பினர் இது தொடர்பான பிரச்சினையை எழுப்பினார். அப்போது அவர் கூறியதாவது:-

வேலூர் மாவட்டத்தில் திருப்பத்தூரில் கடந்த முதலாம் திகதி விடுதலைப் புலிகளை ஆதரித்து 'புரட்சிகர இளைஞர் முன்னணி' என்ற அமைப்பு ஆர்ப்பாட்டம், பேரணி என்பவற்றை நடத்தியது.

அந்த அமைப்பினர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக முழக்கங்களை எழுப்பியதோடு, விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும். அப்படி நீக்காவிட்டால் இந்தியா துண்டுதுண்டாக சிதறுண்டு போகும் என்றும் அவர்கள் பேசினர்.

விடுதலைப் புலிகள் மீதான தடை இருக்கும் நேரத்தில் இத்தகைய பேரணி மற்றும் ஆர்ப்பாட்டத்திற்கு எப்படி அனுமதி வழங்கப்பட்டது? ம.தி.மு.க. நகர செயலாளர் உட்படப் பலர் இதில் பங்கேற்றிருக்கின்றார்கள்.அவர்களுடைய செயல் அமைதிப்பூங்காவாக உள்ள தமிழகத்தில் மீண்டும் விஷ வித்தைத் தூவுவது போல இருக்கின்றது.

எனவே, இதன் மீது அரசு உரிய நடவடிக்கை எடுத்து இரும்புக்கரம் கொண்டு அடக்கவேண்டும். முதலமைச்சர் உரிய நடவடிக்கை எடுப்பாரா? - எனக் கேட்டார்.

இதற்குப் பதிலளித்து முதல்வர் கலைஞர் கருணாநிதி கூறியதாவது:-

ஈழமக்களைக் கொன்று குவிக்கும் சிங்கள இனவெறி அரசைக் கண்டித்து புரட்சிகர இளைஞர் முன்னணி அமைப்பைச் சேர்ந்த அனந்தகிருஸ்ணன் என்பவர் தலைமையில் பேரணியாகச் சென்று ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

அவர்கள் திருப்பத்தூர் பிரதான சாலையில் வராமல் நகரின் ஒதுக்குப்புறமான சாலைகளின் வழியாக ஊர்வலமாகச் சென்றுஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 150 பெண்கள் உட்பட சுமார் 400 பேர் அனந்தகிருஸ்ணன் தலைமையில் பேரணியாகச் சென்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.



இதில் இந்த அமைப்பைத் தவிர மற்ற சில அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டார்கள். இதன் விளைவாக அங்கு எந்தவித பதட்டமும் இல்லை. நிலைமை கண்காணிக்கப்பட்டு வருகின்றது என மாவட்ட அதிகாரிகள் எனக்குத் தகவல் அனுப்பியுள்ளனர். நம்முடைய அனுதாபத்தை, நம்முடைய மனோபாவத்தை ஈழத்திலுள்ள சிங்களவருக்கும், இந்திய அரசுக்கும் சொல்லக்கூடிய அளவிற்கு ஆர்ப்பாட்டம், போராட்டம் அமைந்தால் அது ஏற்கத்தக்கது தான். அவை எதிர்க்கத்தக்கவை. என்று கொள்ளமுடியாதவை.

தமிழர்கள் பக்கத்திலேயே கொல்லப்படுவதை, சீரழிவதை நம்மால் தாங்கிக்கொள்ள முடியாது. அதற்குப் பரிகாரம் என்ன? வன்முறைக்கு வன்முறை பதிலாகாது என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். கிளர்ச்சியில் ஈடுபடுவது அனுதாபத்தை வெளிப்படுத்துவதற்குத்தான். அதற்காகதான் அந்தப் பேரணி. ஆனால், நிலைமை வேறு மாதிரித் திரும்பினால் அரசு வேடிக்கை பார்க்காது.

இந்திய இறையாண்மைக்கும், ஒற்றுமைக்கும் விரோதமாக யார் செயற்பட்டாலும் அரசு சும்மா பார்த்துக் கொள்ளாது.

விடுதலைப் புலிகளுக்கு இங்கு தடைவிதிக்கப்பட்டது சரியா அல்லவா என்பது விவாதத்திற்குரியது. தடை உள்ளவரை அதற்கு அடங்கித்தான் செயற்பட வேண்டும். அதை மீறினால் விளைவுகளை ஏற்றுத்தான் ஆகவேண்டும் - என்றார் - கலைஞர் மு.கருணாநிதி.

## தோப்பூரில் ஞாயிறன்று ஷெல்வீச்சு மக்கள் அங்கிருந்து இடம்பெயர்வு

தோப்பூர், ஓக.9

தோப்பூரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் பொதுமக்களின் வீடுகள் மற்றும் பள்ளிவாசல் ஆகியன பலத்த சேதத்திற்குள்ளாகின.

இச்சம்பவம் கடந்த ஞாயிறன்று மாலை 5.15 மணிக்கு இடம்பெற்றது. இதனையடுத்து பொதுமக்கள் அச்சத்துடன் வீடுகள் மற்றும் சொத்துக்களை விட்டு இரவோடு இரவாக சேருவிலப் பகுதிக்குக் கால்நடையாக இடம்பெயர்ந்தனர்.

இச்சம்பவத்தால் தோப்பூரில் இருந்து இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் சேருவிலவுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களில் சிலர் பின்பு சேருவிலவில் இருந்து கந்தளாய்க்குச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டால் நாம் எவரும் தோப்பூரில் இருக்காமல் கந்தளாய்க்கு இடம்பெயர்ந்து விடுவோம் என்றும் இத்தாக்குதலைத் தடுத்து நிறுத்த முஸ்லிம் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தோப்பூர் மக்கள் கூறியுள்ளனர்.

இந்தத் தாக்குதல் நடவடிக்கையை உடனடியாக நிறுத்தி அமைதியை ஏற்படுத்தினால் மட்டுமே நாம் மீண்டும் போவோம் என இடம்பெயர்ந்த மக்கள் கூறியுள்ளனர்.(க)

# கல்லாறு சோதனைச்சாவடியில் வைத்து 27 இளைஞர்கள் படையினரால் கைது

## அவர்களின் கதி தெரியாது உறவினர்கள் தவிப்பு

மூதூர்,ஓக.9

மூதூர் பிரதேசத்தின் கல்லாறிலுள்ள படையினரின் சோதனைச் சாவடியில் வைத்து 27 தமிழ் இளைஞர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

சமீபத்தில் மூதூர் பகுதியில் இடம்பெற்ற மோதல்களையடுத்து அங்கிருந்து சர்வதேச தொண்டு நிறுவனமான 'அம்கோர்' அமைப்பின் ஏற்பாட்டில் 8 பஸ்களில் திருமலை நோக்கிப் புறப்பட்ட அகதிகள் கல்லாறு சோதனைச் சாவடியில் வைத்துப் படையினரால் வழி மறிக்கப்பட்டனர். அங்கு சோதனை நடவடிக்கைகள் தீவிரமாக இடம்பெற்றன. அந்த பஸ்களில் வந்த அகதிகளில் 27 இளைஞர்களைப் படையினர் கைதுசெய்து தடுத்து வைத்துக் கொண்டு ஏனையோரைச் செல்லுமாறு பணித்தனர்.

கைது செய்யப்பட்ட தமது பிள்ளைகளின் கதி தெரியாமல் அவர்களது பெற்றோர் மற்றும் உறவினர்கள் அங்கலாய்க்கின்றனர் என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. இது குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் அவர்கள் முறைப்பாடு செய்திருக்கின்றனர். தமது பிள்ளைகளை இராணுவத்திடமிருந்து மீட்டுத் தருமாறு அவர்கள் மனித உரிமைக் குழு அதிகாரிகளிடம் அழுதழுது கேட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைதான இளைஞர்கள் 27 பேரும்தற்போது கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுத் தீவிரமாக விசாரிக்கப்பட்டு வருகின்றனர் என்று ஒரு தகவல் தெரிவித்தது. (க)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஓக.9

ஆவரங்கால் கிழக்கு புதுவை ஆலடி முருகன் ஆலயப் பெருந்திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

10 தினங்கள் நடைபெறவுள்ள உற்சவத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (204)

***

புதுக்குடியிருப்பு,ஓக.9

புதுக்குடியிருப்பு சித்திர வேலாயுதர் சுவாமி கோயில் பெருந்திருவிழா கடந்த 31ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

10 தினங்கள் நடைபெற்ற உற்சவத்தில் இன்று புதன்கிழமை தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (204-351)

***

கொழும்புத்துறை,ஓக.9

நாவாந்துறை புனித மரியாள் ஆலய வருடாந்த திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 14ஆம் திகதி மாலை 6 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும் மறுநாள் காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் அன்று மாலை திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும். (204-30)

***

யாழ்.மரியன்னை பேராலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. நவநாள் ஆராதனைகள் தினமும் மாலை 5 மணிக்கு நடைபெற்று வருகின்றன.


நற்கருணைப் பெருவிழா 14 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கும் திருவிழாத் திருப்பலி மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கும் மாலை திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (204-30)

### நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வுகளின் பதினொராவது நாளான இன்று புதன்கிழமை ''அருணகிரியும் திருப்புகழும்' என்ற பொருளில் பாலசண்முகனின் சிறப்புச் சொற்பொழிவும் மாதகல் விநாயகர் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனையும் இடம்பெறும். (204-11)

## நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

## 11ஆம் திருவிழா



### நல்லூரான் திருவடி -05



பஞ்சம்படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி - கிளியே!
ஆறுமுகன் தஞ்சமெடி.

- யோகர் சுவாமிகள்.

### பெருங்கருணை காட்டு

பாட்டாலே உனைத் துதித்தோம்
பார்வதியின் பாலகனே
நாட்டிலே சூழ்ந்த வினை
நம்மை மிக வாட்டுதையா
கேட்டாயோ, வேல் முருகா
கேடு தான் நம் விதியாம்
மாட்டாயோ மனமிரங்க
மாலவனின் மருகோனே
காட்டிடுவாய் பெருங்கருணை
கார் மயில் வாகனனே
நாட்டிடுவாய் சமாதானம்
நல்லை நகர் வேலவனே!

- ஏழாலை எம்.இந்திராணி

### நல்லநிலை வேண்டுமையா

குன்றுதோறாடிவந்து குறைதீர்க்கும் குமரையா!
நன்று நீ நல்லையிலே மயில்மீது அமர் காட்சி
இன்றுபோல் உள்ளிலை உவகையுடன் காண்பதற்கு
என்றுமே அருள்செய்வாய் எழில் வள்ளிமணவாளா!
தொன்றுதொட்டு நீதந்த நல்லையின் அருளாட்சி
பொன்னும் நிலைபோகக் காத்தருள வேண்டுமையா
அன்றுதொட்டு நாம்கண்ட அல்லல் தீர்த்தருள்வாய்
நின்றும் நடந்தும் நின்தாழே நினைந்திட்டோம்
ஒன்றும் உனை உளமார நினைந்துருகிக் கேட்கின்றோம் எமை
கொன்று குவித்துக் குதறும் நிலை இனிவேண்டாம்
கன்று தன்தாயைப் பிரியும் நிலை இனிவேண்டாம்
மன்றும் மாடமும் பேய்கொள்ளும் நிலை எதற்கு - உயர்
சான்று படைத்திடும் சமாதான நிலை வேண்டும் இவை
வென்று பெற்றிட நீ நல்ல வரம் தரவேண்டும்.

- பத்மகி

### மழை வேண்டும் வேலவா!

பஞ்ச பூதங்களையும் அருளாட்சி செய்பவனே
ஆறுமுகனே உனக்கிங்கு பல நூறு மலர் கொண்டு
அழுவணியும் அடியவர் நாம்
மண்ணில் நற்பேறு பெற
பாரில் நல் மழை வேண்டும் வேலவா
நின் கருணை மழை வேண்டும் மயிலவா

நல்லூரானைக் கும்பிடப் பிணிகள் ஓடும்
என்று நாம் அடிதொழ வருகின்றோம்
குண்டுமழை போதும் ஐயா - உன்
அருள் மழை வேண்டுமையா
இயற்கை அழிவுபோதும் ஐயா - உன்
அன்பு மழை வேண்டுமையா

- க.கனகராசா

விழா சிறப்புற வாழ்த்துவோர்:

திருநெல்வேலி நகரில் புதுப்பொலிவுடன் குடும்பத்தினருடன் குதூகலமாக உங்கள் தேவைகளைப் பொதிசெய்த நிலையில், நீங்களே தெரிவுசெய்து மகிழ்ந்திட குளிரூட்டப்பட்ட விற்பனையகம்

ஜீவா (F) பூட் ஸ்ரவ் சப்ளையர்

இல.43/4, பலாலி வீதி,
திருநெல்வேலி.
T.P.: 0773102952

(வி/50026) (24)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


4) 

5) 

................ ...................

07. பின்வரும் இடங்களை இலங்கைப் படத்திற்கு கண்டுபிடித்து அதன் ஆங்கில எழுத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

1. கொழும்பு ................................
2. கண்டி ....................................
3. மட்டக்களப்பு ............................
4. யாழ்ப்பாணம் ..........................
5. புத்தளம் ................................
6. திருகோணமலை ......................




08. பின்வரும் நிறங்களை ஒன்றுடன் ஒன்று கலக்கும்போது உண்டாகும் புதிய நிறத்தின் பெயரை எழுதுக.


1. சிவப்பு + மஞ்சள் = ...............
2. நீலம் + மஞ்சள் = .......................
3. சிவப்பு + நீலம் = ...........................

09. தரப்பட்ட உபகரணத்தினைக் கொண்டு விடை எழுதுக.

1. அருகிலுள்ள உபகரணத்தின் பெயர் யாது?

..........................................................................

2. அதனைச் செயவதற்குத் தேவையான 5 உபகரணங்களையும் எழுதுக.



1. ........................
2. ........................
3. ........................
4. ........................
5. ........................

10. பின்வரும் தலையுடன் கூடிய அலகுகளைக் கொண்ட பிராணிகளின் பெயர்களை எழுதுக.

1) 
2) 
3) 

.................. .................. ..................

4) 
5) 

.................. ..................

11. பலத்த காற்று வீசி மழை பெய்ததால் ............ என்னும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய், பயனிலைகளுடன் ஆறு வாக்கியங்கள் எழுதுக.


1. ..........................................................................
..........................................................................
2. ..........................................................................
..........................................................................
3. ..........................................................................
..........................................................................
4. ..........................................................................
..........................................................................
5. ..........................................................................
..........................................................................
6. ..........................................................................
..........................................................................

(முற்றும்)

## விடைக்குறிப்புகள்

# புலமைப்பரிசில் பரீட்சை

கடந்த புதன்கிழமை 19.07.2006 ஆம் திகதி வெளிவந்த வெளியீடு 17 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளின் விடைக்குறிப்புகள் இங்கு பிரசுரமாகின்றன

01) 2 02) 3 03) 29 04) 4
05) 2
06) சூரியன் ....................வெப்பம்
கிழக்கு .................... திசை
நோயாளி ....................மருந்து
காலம் .................... கடிகாரம்
பரீட்சை .................... புள்ளிகள்
07) 3 08) 2 09) 1 10) 3
11) 2 12) 2 13) 1
14) தமிழ், உடற்கல்வி 15) அழகியல்
16) நிவேதிகா 17) 5 18) இரண்டு
19) 1 20) 3 21) 1
22)  23)  24) 
25) 1 26) 1 27) 1 28) பங்குனி
29) சிங்கம் 30) குசினி 31) ரூபா 36 சதம் 75
32) ரூபா 220 33) 27 பொதிகள்
34) 3 35) 3 36) 2 37) 2
38) 2 39) 2 40) 3

## பகுதி II

1) 1. ரூபா 65 2. ரூபா 15 3. மு.ப. 7.35
4. 1மணி 20 நிமிடம் 5. 3
2) 1. படம் 4 2. படம் 3 3. படம் 5
4. படம் 1 5. படம் 6 6. படம் 2
3) 1. மு.ப. 7.15 மணி 2. மு.ப. 10.30 மணிக்கு
3. 70 நிமிடங்கள் 4. மு.ப. 9.55 5. பி.ப 1 மணி
4) 1. அ) இஸ்லாமியர் 2. அ) இந்துக்கள்
ஆ) திருக்குர்ஆன் ஆ) வேதசிவாகமம்
இ) 1. றம்ழான் இ) 1. தீபாவளி
2. ஹஜ் 2. நவராத்திரி
3. அ) கிறிஸ்தவர்கள் 4. அ) பௌத்தர்கள்
ஆ) பைபிள் ஆ) திரிபீடகம்
இ) 1. நத்தார் 2. ஈஸ்ரர் இ) 1. வெசாக் 2. பொசன்
5) 1. 120 2. 57 3. B 4. 1/5
6) 1. 5 2. 10 3. 2 4. 4
5. 9 6.8 7. 6
7) 1. 679 2. பெண் 3. 12 4. ரூபா 12 222
8. 1. எமது துன்பங்களைத் தீர்த்து உலகில் உயர்வடைய வந்துதித்தாய்
2. உள்ளம் குளிருதல்
3. 1. சின்னச்சிறு கிளி
2. செல்வக் களஞ்சியம்
9. **1. Shop** **2. Money** **3. Girl** **4. Kite**
10. 1. நாடு 2. சந்தை 3. பிள்ளை 4. சாரதி
11. 1. அஸ 2. சதுபாட்ட 3. ஸ்துதிய் 4. நங்கி
12. 1. சருகுமான் 2. பென்குயின் 3. கரப்பான் 4. வரிக்குதிரை
13. 1. தமேவா 2. மேளம் 3. முரசு 4. உடுக்கு
14. 1. வானவில் 2. நிலாக்காட்சி 3. வயற்காட்சி
15. பொருத்தமான ஆறு வசனங்கள்

## வினாத்தாள் - I புள்ளித்திட்டம்

| | |
|---|---|
| 01 - 03 வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 2 புள்ளிகள் வீதம் | 06 |
| 04 - 05 வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 3 புள்ளிகள்வீதம் | 06 |
| 06 - 5 புள்ளிகள் | 05 |
| 07 - 08 வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 2 புள்ளிகள் வீதம் | 04 |
| 09 - 11 வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 3 புள்ளிகள் வீதம் | 09 |
| 12 - 13 வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 2 புள்ளிகள் வீதம் | 04 |
| 14 - 17 வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 3 புள்ளிகள் வீதம் | 12 |
| 18 - 30 வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 2 புள்ளிகள் வீதம் | 26 |
| 31 - 33 வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 3 புள்ளிகள் வீதம் | 09 |
| 34 - 36 வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 2 புள்ளிகள் வீதம் | 06 |
| 37- 5 புள்ளிகள் | 05 |
| 38 - 2 புள்ளிகள் | 02 |
| 39 - 40 வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 3 புள்ளிகள் வீதம் | 06 |

## வினாத்தாள் -II புள்ளித்திட்டம்

01 - 5 x 2 = 10 புள்ளிகள்
02 - 6 x 1 = 06 புள்ளிகள்
03 - 5 x 2 = 10 புள்ளிகள்
04 - 4 x 3 = 12 புள்ளிகள்
05 - 4 x 1 = 04 புள்ளிகள்
06 - 7 x 1 = 07 புள்ளிகள்
07 - 4 x 2 = 08 புள்ளிகள்
08 - 3 x 2 = 06 புள்ளிகள்
09 - 4 - = 04 புள்ளிகள்
10 - 4 - = 04 புள்ளிகள்
11 - 4 - = 04 புள்ளிகள்
12 - 4 - = 04 புள்ளிகள்
13 - 4 - = 04 புள்ளிகள்
14 - 3 - = 03 புள்ளிகள்
15 - 6 x 2 = 12, 2 புள்ளிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பம் குடும்பமாக தூக்கில் போட்டு கொலைசெய்கிறது சிங்கள இராணுவம்

## தமிழகம் சென்ற ஈழ அகதிகள் தெரிவிப்பு

இராமநாதபுரம், ஓக9

"குழந்தைகள் என்றுகூட பாவ இரக்கம் பாராது குடும்பம் குடும்பமாக தமிழர்களைத் தூக்கில்போட்டுப் படுகொலை செய்கிறது சிங்கள இராணுவம்" - இவ்வாறு இலங்கையிலிருந்து தமிழகத்துக்குச் சென்றிருக்கும் தமிழ் அகதிகள் தெரிவித்தனர் எனத் தமிழக ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மன்னார்-தாழ்வுப்பாடுப் பகுதியைச் சேர்ந்த தமிழ் அகதிகள் 90 பேர் கடந்த சனிக்கிழமை தமிழகத்தின் தனுஷ்கோடி-அரிச்சல் முனைப் பகுதியை வந்தடைந்தனர். அந்த அகதிகளே தமிழகப் பொலிஸாருக்கு இந்தத் தகவலைத் தெரிவித்தனர்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

இராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்றுவரும் போரில் சிக்குண்டு கொல்லப்படுவதும் - சித்திரவதைக்குள்ளாவதும் ஒன்றும் அறியாத அப்பாவி மக்களே.

பெண்கள் வல்லுறவுக்குள்ளாக்கப்படுகிறார்கள். இதனால், பெண்கள் வீட்டை விட்டு வெளியில் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மன்னார் - வங்காலையில் இரு குழந்தைகள் உட்பட நால்வர் கொண்ட குடும்பத்தைத் தூக்கில் போட்டுக் கொலை செய்தது சிங்கள இராணுவம். இது போன்று பலரும் தூக்குப்போட்டு - மர்மமான முறையில் படுகொலை செய்யப்படுகிறார்கள். இதற்குப் பயந்தே சகலரும் தமிழகம் வருகின்றனர்.- இவ்வாறு அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (க)


## கண்ணீர் அஞ்சலி



எமது விஞ்ஞான ஆசிரியர்
இரா செல்வவடிவேல் அவர்களின் அன்புத்தாய்
திருமதி இராமசாமி செட்டியார் சுப்பம்மாள்
அவர்கள் இறைபதம் அடைந்த செய்திகேட்டு அதிர்ச்சி அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மணிகல்வி நிறுவனம்,
தலையாழி, யாழ்ப்பாணம்.

தரம் -9 மாணவர்கள்.
(சி/50706)(26.14.15)

## MECHANICAL ENGINEER

**VACANCY** exists for Mechanical Engineer with a Degree/ Diploma in Mechanical Engineering with 5 years post qualification experience in Mechanical Engineering workshop with at least 2 years in the management capacity.

We are looking for a proactive self motivated person with pleasant qualities.

The Selected candidate will be offered an attractive package.

Please forward your application within 2 weeks to:

**The Managing Director**
**Promoters Engineering Co.Ltd.**
**33, Nallur Cross Street,**
**Nallur, Jaffna.**

(C/50701)


# மூதூரில் வீரச்சாவடைந்த 18 போராளிகளின் விவரம்

திருகோணமலை, ஓக.9

மூதூர் இராணுவ முகாம் மீது கடந்த 2ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவடைந்த லெப்ரினன்ட் கேணல் குஞ்சன் உட்பட தமது 16 போராளிகளின் விவரங்களையும், மறுநாள் 3ஆம் திகதி மூதூர் இறங்குதுறை கடற்பரப்பில் இடம்பெற்ற மோதலின்போது வீரச்சாவடைந்த 3 பேராளிகளின் விவரங்களையும் புலிகள் வெளியிட்டுள்ளனர். அவை வருமாறு:-

* லெப்.கேணல் குஞ்சன் (இராசையன்) (குணநாயகம் ரதிசீலன் - 2 ஆம் வட்டாரம் கட்டைபறிச்சான் மூதூர், திருமலை,)
* வீரவேங்கை நம்பி (வெற்றிவேல் ஞானேஸ்வரன் - பூநகர் ஈச்சிலம்பற்று, மூதூர், திருமலை.)
* வீரவேங்கை காந்தரூபன் (வசந்த குமார் சுமன் - பள்ளிக்குடியிருப்பு, தோப்பூர், மூதூர்)
* வீரவேங்கை குணாளன் (கதிரன் கமலானந்தன் - அன்புவெளிபுரம், பாலையூற்று, திருமலை)
* வீரவேங்கை கோமகன் (சோமசுந்தரம் சத்தியசீலன் - 7ஆம் வட்டாரம், கணேசபுரம், திருமலை)
* வீரவேங்கை அறிவழகன் (செல்வராசா கிருபராசா - 5 ஆம் வட்டாரம், சம்பூர், திருமலை)
* வீரவேங்கை ராசசேகர் (குணநாயகம் கிருபேஸ்வரன் - 5 ஆம் வட்டாரம், சம்பூர், திருமலை)
* வீரவேங்கை மலரவன் (தெய்வேந்திரன் நாகேஸ்வரன் - கணேசபுரம் மூதூர், திருமலை)
* வீரவேங்கை குமுதன் (தம்பிராசா ஜெயகாந்தன் - 5ஆம் வட்டாரம், சம்பூர், திருமலை)
* வீரவேங்கை குன்றுமாறன் - (கேசவராஜா தயாசிங்கம் - மதுரம் குழி, ஈச்சிலம்பற்று, திருமலை)
* வீரவேங்கை மணிவண்ணன் (இராமையா மாணிக்கராசா - குமாரபுரம், கிளிவெட்டி, திருமலை)
* வீரவேங்கை குன்றவாணன் (கனகநாயகம் சுரேந்திரன் - 2 ஆம் வட்டாரம் கிளிவெட்டி, திருமலை)
* வீரவேங்கை துவாரகன் (மாணிக்கவேல் சிவகுமார் 4 ஆம் கட்டை, பன்குளம், திருமலை)
* வீரவேங்கை அருள் (கிருஸ்ணகுமார் டினேஸ் - தம்பலகாமம், திருமலை)
* வீரவேங்கை மஞ்சுதன் (சவுந்தரராசா செல்வராசா - மதுரம் குழி, ஈச்சிலம்பற்று, திருமலை)
* வீரவேங்கை வேலு (மயில்வாகனம் பாக்கியராசா - வாழைத்தோட்டம், வெருகல், திருமலை)

03.08.2006 அன்று மூதூர் இறங்குதுறை கடற்பரப்பில் இடம்பெற்ற மோதலின் போது வீரச்சாவடைந்தோர்:-

* 2ஆம் லெப். குறிஞ்சிக்கிளி (செல்வராசா செல்வநஞ்சன் - யாழ்ப்பாணம்)
* வீரவேங்கை புரட்சிவீரன் (குராசேத்திரன் பிறேந்திரன் - யாழ்ப்பாணம்)
* வீரவேங்கை சங்கர் (சிவாசிகணேசன் அலெக்ஸ் மேல்ட் - யாழ்ப்பாணம்) (க)


## 45ஆம் நாள் நினைவலைகள்



எமது ஆருயிர் நண்பன்
மகேந்திரநாதன் சுஜீபன்
அவர்கள் 24.06.2006 அமெரிக்காவில் காலமான செய்தி கேட்டு மிகுந்த வேதனை அடைவதுடன், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.
2001 ஆம் ஆண்டு கலை, வர்த்தகப் பிரிவு மாணவர்கள்
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி.
(சி/50707)(32.14.15.26)

வசீகர தோற்றத்திற்கு
## சந்தனாலேப
(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)




யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.Phone: 222 2567

சகல பார்மஸிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REGNO A/L 250





## 35 வருடங்களாக புனரமைக்கப்படாத வீதி

நவாலி, ஓக.9

யாழ். மானிப்பாய் வீதியிலிருந்து தாவடி மானிப்பாய் வீதியுடன் இணையும் மாப்பியன் வீதி கடந்த 35 வருடகாலமாகப் புனரமைக்கப் படவில்லை.

இந்த வீதியினைப் புனரமைப்புச் செய்து தருமாறு சுதுமலை அம்பாள் சனசமூக நிலையத்தினர், மானிப்பாய் பிரதேச சபைச் செயலாளரிடம் மகஜரொன்றைக் கையளித்துள்ளனர். (எ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

வவுனியா நகரில் 1320சதுர அடி அடித்தள விசாலமும் இருமாடிகள் கொண்டதும் இரு புற வழிப்பாதைகள், மின்சாரம், நீர்விநியோகம், தொலைபேசி இணைப்பு கொண்டதும் நகரின் மத்தியில் அமைந்துள்ளதுமான கடை விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 9363150 (52883)

## வீடு, காணி விற்பனைக்கு

மானிப்பாய், கட்டுடையில் ஆறு அறைகளுடன் எல்லா வசதிகளும் கொண்ட வீடும், ஆறுபரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. நேரடித் தொடர்புகளுக்கு கந்தையா இலட்சுமணன் ஜே.பி., யூ.என்.எச்.சி.ஆர். தண்ணீர் தாங்கிக்கு அருகில் (கட்டுடை) (சண்முகம் கடைக்கு முன்வீடு). (53030)

## வான் விற்பனைக்கு

**LX20 - 52 - XXXX** தொடரிலக்கமுடைய வான் விற்பனைக்குண்டு. தொடர்பு: செல்வா, காரைக்கால் வீதி, மஞ்சத்தடி, இணுவில். **T.P.No.:** 0776153429 (53311)

## கோழிக்குஞ்சு விநியோகம்

பகிரா புறொயிலர் குஞ்சுகள் 09.08.2006 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். றாஜீவ்-நவாலி வீதி, ஆனைக்கோட்டை, தாரகை - பருத்தித்துறை, றாஜ் ஸ்ரோர் - நெல்லியடி, P.ரவி - சாவகச்சேரி, தாசன் பாம் - கோயில் வீதி, நல்லூர், மதுரா - 227, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், நாகம்ஸ் பாம்- வட்டுக்கோட்டை, றஞ்சித் - 517, ஸ்ரான்லி வீதி றாஜீவ் கால்நடை தீவன விற்பனை நிலையம் - மாதகல் வீதி, பண்டத்தரிப்பு மற்றும் அனைத்து கால்நடைச் சுங்கக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். **T.P.: 222 2867, 2223529.** (51990)

இரண்டுமுறை தடுப்பு மருந்து போடப்பட்ட **Original Prima Broiler** குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 14.08.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை, நெல்லியடிக் கிளைகளிலும் உடுவில் பாம் - ஆலடி, உடுவில், சன்னதி பாம் - தொண்டைமானாறு, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர்- 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி/50695)

## அறைகள் வாடகைக்கு

முதலாம்/இரண்டாம் வருட பல்கலைக்கழக மாணவிகளுக்கு யாழ்.கஸ்தூரியார் வீதியில் எல்லா வசதிகளுடனும் அறைகள் வாடகைக்குண்டு. தொடர்புகளுக்கு: **T.P.:** 0777032667 (53116)

# NOTICE

## University of Jaffna IRQUE Project

### Skill Enhancement in IT- Final year Project

### Baseline Indicator - Placement Test

The above test will be held on the main Campus of the University of Jaffna, Thirunelvely and on the Vavuniya campus on the 15 th August 2006 from 10.00 a.m. to 11.00 a.m. Only those who followed their degree programme at Vavuniya Campus will be allowed to sit the test at Vavuniya Campus.

The Students who applied to follow the Intensive Course in English (the Arts, Management Studies & Commerce Students who sat their final examinations in 2005/2006) are requested to sit the above test as it is a prerequisite to follow the course. Those who have failed to apply to follow the course will also be allowed to sit the examination.

**Prof.K.Kandasamy,**
**Director/LTS,**
**IRQUE Project,**
**University of Jaffna.**

# சிங்களம்

O/L பரீட்சைக்கு 2ஆம் மொழி சிங்களம் விசேட வகுப்பு நடைபெறுகிறது.
(1994 - 2005 வரையிலான பரீட்சைத் திணைக்களத்தின் வினாப்பத்திர அடிப்படையில் சனி, ஞாயிறு பி.ப. 5-6 வரை)

1) "முகாமைத்துவம்" மும்மொழி (தமிழ், சிங்களம், ஆங்கிலம்) கலைச் சொல் அகராதி (Management - Official Terms)
2) சட்டச் சொல் அகராதி மும்மொழி (தமிழ், சிங்களம், ஆங்கிலம்) (Legal Terms)

பிரதிகள் எம்மிடம் ஓடருக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: **சொலமன்,**
போதனாசிரியரும் மொழிபெயர்ப்பாளரும்,
38A, றக்கா லேன், சுண்டுக்குளி. (53110)(32-19-11)

# அழைப்புக் கட்டளை

*இல.16 பிரிவு 55 (1)*

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில்

ஜெபநேசன் பெண் அமலோ செல்வகுமாரி,
22/4, விதானையார் லேன்,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்

வழக்காளி

எதிர்

வழ.இல.மணநீக்கம்/661

நீக்கிலாம்பிள்ளை ஜெபநேசன்,
கிளாலி, எழுதுமட்டுவாள்.

எதிராளி

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளிகள் பிராது அணைத்து அதில் கோரிய நிவாரணங்களை பெறுவதற்காக இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2006ஆம் ஆண்டு ஆவணி மாதம் 31ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றில் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு, சொல்லப்பட்ட திகதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுதக்சிக்காரர் இல்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்துகொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர். பதிவுபெற்ற தாணி மூலம் நீர் தோன்றாவிடில் சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

குறிப்பு: விளக்கத் திகதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு கூப்பிடும் திகதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவுசெய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவுசல் மூலம் அனுப்பிவைப்பதற்கும் செலவை மேவுவதற்கு தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

2006ஆம் ஆண்டு ஆடி மாதம் 28ஆம் நாளாகிய இன்று.

"நீதிமன்றக் கட்டளைப்படி"

வரைவு:- சீ.சுகந்திரபின்னை, வழக்காளி சட்டத்தரணி.

சு.சிறீமோகன், பதிவாளர், மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

(53104)(32-19-11)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில் 10 ★ 05 ★ 1912



இறைவன் அடியில் 11 ★ 07 ★ 2006

### அமரர் செல்லம்மா துரையப்பா (கொட்டடி)

சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும், கொட்டடி ஆஸ்பத்திரி வீதியை வசிப்பிடமாகவும் தற்பொழுது வெள்ளவத்தை; தெஹிவளையில் வசித்தவருமாகிய காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் கணபதிப்பிள்ளை துரையப்பாவின் அருமை மனைவியுமான திருமதி செல்லம்மா துரையப்பா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (09-08-2006) புதன்கிழமை முகத்துவாரத்திலும் சபிண்டீகரணக் கிரியைகள் நாளை (10-08-2006) இல.A.1/3, அரசாங்க மாடிகள், ஆஸ்பத்திரி வீதி, கறுபோவில, தெஹிவளையில் நடைபெறும். இந்நிகழ்வில் தாங்கள் குடும்பசகிதம் கலந்துகொண்டு எங்கள் இதயத்தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

மேலும் அவரது மரணச்செய்தியறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையம் அனுப்பியவர்களுக்கும், உதவிகள் புரிந்தவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்:
பூலோகராஜா சசிதரன் *(பேரன்)*,
(ராகி பில்க்ஸ், நல்லிசில்க்ஸ் - உரிமையாளர்),
யாழ்ப்பாணம்.
தொ.பே.0112719941
0112360180

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(53114)(32-26-19-11)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 10 - 12 - 1953



உதிர்வு 10 - 07 - 2006

### அமரர் மார்க்கண்டு பொன்ராசா

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மார்க்கண்டு ராசமணியின் அன்பு மகன் பொன்ராசா அவர்களின் மறைவுச்செய்தி அறிந்து நேரில் வந்து எம் துயரில் பங்குகொண்டு ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

காந்திஜி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
மனைவி கலா, பிள்ளைகள்.

(53105)(32-19-11)

# Australia/U.K. நாட்டு பல்கலைக்கழக பட்டப் படிப்புகளை Singapore, Malasia ஆகிய நாடுகளில் கற்க அரிய சந்தர்ப்பம்

* கணனித்துறை * Hotel Management
* வணிகத்துறை * Professional Course (ACCA, CAT)

மற்றும் அனைத்துத் துறைகளிலும் கல்வி கற்று இறுதி ஆண்டில் U.K., Australia ஆகிய நாடுகளில் கல்வி கற்க அரிய சந்தர்ப்பம். போக்குவரத்து வசதி, தங்குமிட வசதி, பகுதி நேர வேலைவாய்ப்பு (சில துறைகளிற்கு) ஆகிய அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும். தேவையற்ற பண விரயத்தையும் கால விரயத்தையும் தவிர்க்க உடன் தொடர்புகொள்ளுங்கள்.

* September மாதத்திற்கான பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தொலைபேசியில் தொடர்புகொண்டுவிட்டு வருவது விரும்பத்தக்கது.
T.P.: 0773164320

**Arul Communication,**
**No.1, Brown Road,**
**Jaffna.**

சனி, ஞாயிறு தினங்களில் நேரடியாகத் தொடர்புகொள்ளமுடியும்.

(53113)(32-19-11)

# UTI

## யூனியன் ரஸ்ட் அன்ட் இன்வெஸ்ற்மென்டஸ் லிமிட்டட்

*(கலைப்பில் உள்ளது)*

### வைப்புக்களை மீளளித்தல்

மேற்படி கம்பனியின் வைப்பாளர்களின் வைப்பு மீதியின் (முதலின்) ஒரு பகுதியை மீளளிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேற்படி மீளளிப்பை 2006 ஜூலை 21 ஆம் திகதி முதல் அலுவலக நாள்களில் கீழ்காணும் முகவரியில் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை வைப்புச்சான்றிதழ் / மாற்றப்படாத காசோலை மற்றும் ஏனைய தொடர்புடைய ஆவணங்கள் ஆகியவற்றின் மூலப்பிரதியுடன் போட்டோ பிரதி ஒன்றையும் சமர்ப்பித்து ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

வைப்பாளர் இறந்திருப்பின் அதனை உறுதிப்படுத்தும் ஆவணங்களை பின் உரித்தாளர் சமர்ப்பிக்க வேண்டும்.


நேரில் சமுகமளிக்க முடியாதோர் மேற்படி ஆவணங்களை தமது தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியுடன் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட தமது பிரதிநிதி மூலம் அனுப்பித் தமக்குரிய மீளளிப்பை பெற்றுக்கொள்ளலாம். மேலும் மேற்படி ஆவணங்களை சுயமுகவரியிடப்பட்ட கடித உறையுடன் சேர்த்து பதிவுத்தபாலில் அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். மீளளிப்புகள் யாவும் வைப்பாளரின் பெயரில் எழுதப்பட்ட பிறருக்கு மாற்றமுடியாத காசோலை மூலம் வழங்கப்படும்.

2006 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி வைப்பு மீளளிப்பை பெற்றுக்கொள்ளாத வைப்பாளர்கள் பகிர்ந்தளிப்பிலிருந்து விலக்கிக் கொள்ளப்படுவர் என இத்தால் அறியத்தருகிறோம்.

Liquidators
**Union Trust & Investments Ltd,**
**C/O: SJMS Associates,**
2nd Floor, No.30, Galle Road, Wellawatte,
Colombo - 06. T.P: 2508874

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

மனமகிழ் பிறப்பில் 17 ★ 11 ★ 1955



அகால மறைவில் 26 ★ 06 ★ 2006

அமரர்

### கந்தையா யோகேஸ்வரன் (பவான்)

வம்சத்தின் ஜோதியாய் 'நிலா'வுக்கு ஆதவனாய்
புதல்வரின் உயர்வுக்காய் பொழுதெல்லாம் உழைப்பவனாய்
பெற்றோர் சோதரரின் அன்பு நிறை பொக்கிஷமாய்
இன்முகத்தோடு அனைவரையும் அணைத்து நின்றாய்
வன் மரணம் வந்ததுவோ? வகையறியாது உருகுகின்றோம்
ஆண்டவனின் அடிசேர அனுதினமும் வேண்டுகிறோம்.

ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
பெற்றோர், சகோதரிகள்.

(53107)(32-26-19-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## கந்தன் செல்லையா



இருபாலை, கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த கந்தன் செல்லையா 05.08.2006 சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் வள்ளியாச்சி செல்லையாவின் அன்புக் கணவனும் சந்திராதேவி(ஜேர்மன்), சந்திரராசா(பிரான்ஸ்), தெய்வேந்திரம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் துரைராசா (ஜேர்மன்), தமிழ்ச்செல்வி (பிரான்ஸ்), மங்களேஸ்வரி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் அனுராசா, மதனராசா, சிந்திப்பிரியா, நவரூபன், நந்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று (09.08.2006) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் வீட்டில் நடைபெற்று பூதவுடல் கானான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்" (வெளி 14:13)*

*இருபாலை,*
*கொய்யாத்தோட்டம்.* (53118)(22-11-15)

தகவல்:
**வள்ளியாச்சி செல்லையா (மனைவி)**


# COMPUTER EXPRESS
**Institute of Information Technology**
இல.15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.
021-222 8250,0777 222422

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற
Graphic துறையில் புதிய வடிவமைப்புக்களுடன் ஒருவாரகால முழுநேர பயிற்சிநெறி

**Diploma in Graphic Designing**

*Course Contents*
- கணனி தொடர்பான அறிமுகம்
- இயக்க அமைப்பு (Windows XP)
- Internet & e-mail
- Adobe Photoshop
- CorelDRAW
- Cool 3D Studio
- Macro media Flash MX
- Introduction to 3D Albam
- Extra practical

Course fee :- 2000/=

**Diploma in Video Mixing**

*Course Contents*
- கணனி தொடர்பான அறிமுகம்
- இயக்க அமைப்பு (Windows XP)
- Internet & e-mail
- Adobe Photoshop
- Adobe Premiere
- Cool 3D Studio
- Pinnacle Studio
- VCD Cutter
- Introduction to 3D Albam

Free Study Pack & Photos CD

Course fee :- 3000/=

நன்மைகள்:-
- பாடநெறியின் இறுதியில் பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுவதால் கணனி தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.
- தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- 100% செய்முறைப் பயிற்சிகளுடனான விரிவுரைகளிற்கு உத்தரவாதம்.

வகுப்புக்கள் ஆரம்பம்:- **14/08/2006 - 8.30**


# முன்பள்ளியின் விளையாட்டு விழா

வடக்கு - கிழக்கு முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய சண்டிலிப்பாய் பிரதேசத்துக் குட்பட்ட இளவாலை குடும்ப முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு விழா இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு பெரியவிளான் றோ.க.த. பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர் ரி.ராஜ்குமார் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பெரியவிளான் ஜே/153 பிரிவு கிராம சேவையாளர் எஸ். சூரியகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

# கூட்டம்

யாழ்.மாவட்ட மெய்வன்மைத் தொழில்நுட்ப அலுவலர்கள் சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (202)

# கணனிக் கருத்தரங்கு

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் ஐ.பி.எம்.எஸ்.கணனி நிறுவனம் ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களிற்கான இலவச ஜி.ஐ.ரி.கருத்தரங்கை நடத்தவுள்ளது.

இக்கருத்தரங்கு இன்று புதன்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணிவரை யாழ்ப்பாணம் சிவன்பண்ணை வீதியிலுள்ள ஐ.ஐ.எஸ். சிற்றி கம்பஸில் நடைபெறவுள்ளது.(202)


# ஜயோதா

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6742841 முதல் 6753119 வரை. சீட்டிழுப்பு இல. 260 திகதி 07-08-2006

**வெற்றி எண்கள்**

**2 2 0 5 9 9** சுப்பர் எண் **04**

ஜக்பொட் பரிசு ரூ. **15,042,400/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 15,042,400/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/= | 1,000,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/= | 450,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 90 | 5,000/= | 450,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 902 | 500/= | 451,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 9020 | 50/= | 451,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 89375 | 10/= | 893,750/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 08 | 5,000/= | 40,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 91 | 1,000/= | 91,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 902 | 100/= | 90,200/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8942 | 20/= | 178,840/= |
| | | மொத்தம் ரூ. | **4,095,790/=** |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 66,125/= | 529,000/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை **4,624,790/=**

ரூ. 66,125/- பெறுமதியான 8 மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| குருணாகல் | 6744288-9-76 |
| திருகோணமலை | 6745856-7-43 |
| பொலனறுவை | 6743989-7-60 |
| காலி | 6745304-7-04 |
| கம்பஹா | 6752728-0-55 |
| பதுளை | 6743539-2-90 |
| மாத்தளை | 6744846-1-30 |
| அம்பாந்தோட்டை | 6745170-1-42 |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
**ரூ. 15,293,175/-**

தொடர் இல. 7655525 க்கு மேற்பட்ட செல்லுபடியான டிக்கட்டுகள் 2006 ஆகஸ்ட் 10 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.



# 100% VEGETABLE PROTEIN

### புதிய புரோட்டினெக்ஸின் அனுகூலங்கள்

நீங்களும் உங்கள் குடும்பமும் ஏனைய போஷாக்குப் பானங்களை விட புதிய புரோட்டினெக்ஸ் இனை ஏன் தெரிவு செய்ய வேண்டும் புதிய புரோட்டினெக்ஸ் ஆனது சோயா புரதம் ஐசோலேட் இனை ஆதாரமாகக் கொண்ட பானமாகும். இதுவே மிகச் சிறந்த முறையில் சுதாரமாகக் கொண்ட பானமாகும். இதுவே மிகச் சிறந்த முறையில் சுகாத்திகரிக்கப்பட்ட தாவரப் புரதம். மேலும் சோயா புரதம் ஐசோலேட் ஆனது 90% இருகும் அதிகமான புரதத்தைக் கொண்டதுடன் புதிய புரோட்டினெக்ஸ் ஆனது ஏனைய பாற்பொருட்களைப் போலன்றி கொலஸ்ரோல் அற்ற, கொலஸ்ரோலைக் குறைப்பதற்கு உதவக்கூடிய, 72 கிராம் புரதம், பீற்றா கரோட்டீன், 13 விற்றமின்கள், 11 கனியுப்புக்கள், 2 கிராம் இற்கு குறைவான கொழுப்பு என்பவற்றைக் கொண்டதுடன் முக்கியமாக Isoflavones இனையும் கொண்டுள்ளது.

புதிய புரோட்டினெக்ஸ் ஆனது ஆரோக்கியமான சுகவாழ்விற்கு அவசியமான 22 அமினோ அமிலங்களைக் கொண்ட ஒரேயொரு தாவரப்புரதம் என்பது மட்டுமன்றி ஏனைய அனுகூலங்களையும் கொண்டுள்ளது.

### Isoflavones என்பவை யாவை ?

இவை தாவரங்களில் காணப்படும் (phytochemical) என்னும் வகுப்பைச் சேர்ந்த ஒட்சியேற்றத்திற்கு எதிராகச் செயற்படக்கூடிய தன்மையைக் கொண்டவை. அன்டி ஒக்ஸிடன்ட் (Antioxident) என்பவை சூழல்மாசு, சூரிய ஒளி, மற்றும் எமது உடல் செயற்பாட்டால் ஏற்படும் கலச் சேதத்தினை தடுக்க அல்லது மீள் உருவாக்க வல்லவை. மேற்குறிப்பிட்ட காரணிகளால் உடலில் ஒட்சியேற்றம் ஏற்படுவதால் அபாயகரமான இரசாயனப் பதார்த்தங்கள் (free radical) உருவாகின்றன. இவை அதிக தாக்குதிறன் கொண்டதால் DNA யினை சேதப்படுத்தி கல மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இதுவே புற்றுநோய் ஏற்படுவதற்கான காரணமாகும். இவ் இரசாயனப் பதார்த்தங்கள் உடலின் நோயெதிர்ப்புத் தன்மையை செயலிழக்க வல்லது. மேலும் இவை முதுமையடைதலின் போது ஏற்படும் மாற்றங்களுக்கும் காரணமாக விளங்குகின்றது.

புரோட்டினெக்ஸ் (Soy Protein Isolate) உள்ள isoflavones ஆனது free radical உருவாகும் இரசாயனத் தாக்கத்தினை தடுப்பதுடன், உருவாகி உள்ளவற்றையும் அழிக்கவல்லது.

### புதிய புரோட்டினெக்ஸ் இன் மூலம் உடல் ஆரோக்கியத்திற்கான அனுகூலங்கள் யாவை ?

1 இழைய மற்றும் தசை வளர்ச்சி - சோயாப்புரதம் ஆனது குளூடமின், ஆர்ஜனின், லைசின் மற்றும் கிளை- சங்கிலி அமினோ அமிலங்கள் அடங்கலாக பல அமினோ அமிலங்களையும், விலங்குப் புரதத்தினையும் விட அதிகளவில் கொண்டிருப்பதால் இழைய வளர்ச்சிக்கு உன்னதமானது. ஆர்ஜனின் ஆனது தசை விருத்திக்கு மிக முக்கியமானதுடன் மேம்படுத்தப்பட்ட நோயெதிர்ப்புத் தன்மைக்கும் உதவுகின்றது.

2. பீற்றா கரோட்டின் அனுகூலங்கள்- புரோட்டினெக்ஸ் பீற்றா கரோட்டினைக் கொண்டுள்ளது. இதன்முக்கிய அனுகூலம் அன்டி ஒக்சிடென்ட் (Antioxidant) ஆகத் தொழிற்படுவது. இது விற்றமின் A,E யினைப் போன்று நோயெதிர்ப்புத் தன்மையை வலுவடையச் செய்யக்கூடியது. இது free radical இனை நடுநிலையாக்குவதன் மூலம் கலங்களைப் பாதுகாக்கவல்லது. Free radical ஆனது ஒட்சியேற்றம் என்னும் செயற்பாட்டின் மூலம் உடலைத் தாக்கவல்லது. இச் செயற்பாட்டை பீற்றா கரோட்டின் தடுப்பதன் மூலம் நோயெதிர்ப்புத் தன்மையை வலுவடையச் செய்யும். ஆய்வுகளின்படி பீற்றா கரோட்டின் ஆனது புற்றுநோயைத் தடுக்கவல்லது. விற்றமின் A யானது நுரையீரல் இழையத்திற்கு போஷணையை வழங்குவதன் மூலம் புற்றுநோயை தடுக்கவல்லதுடன் தொற்று நோயிலிருந்தும் பாதுகாக்கும். பீற்றா கரோட்டினானது கொலஸ்ரோலின் கட்டமைப்பை மாற்றுவதன் மூலம் நாடிகளில் கொலஸ்ரோல் படிவதைத் தடுக்கின்றது. அத்துடன் பீற்றா கரோட்டினானது உடலிலுள்ள T-கலங்கள் இனை வலிமையாக்குவதன் மூலம் HIV தாக்கத்தை கட்டுப்படுத்துகிறது.

3. இருதய நோய் அபாயத்தை குறைக்கின்றது - புரோட்டினெக்ஸ் (Soy Protein Isolate) உள்ள isoflavones ஆனது LDL இனை குறைப்பதினாலும் இரத்தம் உறைதலை குறைப்பதனாலும் மாரடைப்பு மற்றும் பாரிசவாத அபாயத்தைக் குறைக்கின்றது. மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்படி 25 கிராம் சோயாப்புரதம் 9 வாரங்களுக்கு உட்கொள்வதன் மூலம் சராசரி 5% LDL குறைவடைகின்றது. மேலும் அதிகளவு LDL உள்ளவர்களில் 11% வீழ்ச்சி அவதானிக்கப்பட்டுள்ளது. (ஒவ்வொரு 10% முதல் 15% LDL வீழ்ச்சிக்கும் 20% முதல் 25% வரை மாரடைப்பு அபாயம் குறைவடைகின்றது).

1999ம் ஆண்டு FDA என்னும் அமைப்பு அனுமதியளித்ததன்படி கொழுப்பு மற்றும் கொலஸ்ரோல் குறைவான உணவிற்கு மேலதிகமாக 25 கிராம் isoflavones அடங்கிய சோயாப்புரதத்தினை உட்கொள்வதால் மாரடைப்பு அபாயத்தினை குறைக்கின்றது.

4. புற்று நோய்க்கெதிரான பாதுகாப்பு - புரோட்டினெக்ஸில் உள்ள isoflavones ஆனது மார்பகப் புற்றுநோய் கருப்பைப் புற்றுநோய், முன்னிலைச்சுரப்பி புற்றுநோய் போன்ற ஹோர்மோன் சம்பந்தப்பட்ட புற்றுநோய்களில் இருந்து உடலைப் பாதுகாக்-கின்றது. Isoflavones ஆனது புற்றுநோய்க்கெதிரான மருந்துகள் செயற்படும் அதே முறையில் செயற்படுகின்றது. சனத்தொகையை ஆதாரமாகக் கொண்ட ஆய்வுகளின்படி உட்கொள்ளப்படும் isoflavones ற்கும் மார்பகப்புற்றுநோய் மற்றும் கருப்பைப் புற்றுநோய் அபாயம் குறைவடைவதற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உள்ளது. சோயாபுரதம் மற்றும் isoflavones செறிவான ஏனைய உணவுகளை உட்கொள்ளும் பெண்களில் கருப்பைப் புற்றுநோய் அபாயம் 54% குறைவடைகின்றது.

5. ஒஸ்டியோபொரோஸிஸ் இற்கு எதிரான பாதுகாப்பு- புரோட்டினெக்ஸிலுள்ள (Soy Protein Isolate) ஆனது உடலில் கல்சியத்தை தக்க வைத்துக் கொள்ளும் தன்மையையும், எலும்புகள் கல்சியத்தை உள்ளெடுக்கும் தன்மையையும் மேம்படுத்துகின்றது. அத்துடன் isoflavones ஆனது எலும்பு இழப்பு, எலும்பு முறிவு போன்றவற்றை கட்டுப்படுத்தி ஒஸ்டியோபொரோஸிஸ் ஏற்படுவதை தடுக்க உதவுகின்றது. அத்துடன isoflavones புதிய எலும்புகள் உருவாகுவதற்கு உதவுவதற்கான சான்றுகளும் உள்ளன. ஆய்வுகளின்படி நாளொன்றுக்கு 40g சோயா புரதம் உட்கொள்ளும் மாதவிடாய் நிரந்தரமாக நின்றுபோன (இறுதி மாதவிடாயின்பின்) பெண்களின் முதுகெலும்பு கனியுப்பு அடர்த்தி கணிசமான அளவு அதிகரித்துள்ளது. இதுவே ஒஸ்டியோபொரோஸிஸில் கூடுதலாக பாதிக்கப்படும் எலும்பு.

6. இறுதி மாதவிடாயின் பின்பும் அதற்கு முன்பும் ஏற்படும்- அறிகுறிகளைக் கட்டுப்படுத்துகின்றது. புரோட்டினெக்ஸிலுள்ள isoflavones ஆனது உடலின் ஈஸ்ரஜன் குறைவடையும் அல்லது மாறுபடும் சந்தர்ப்பங்களில் அதனைக் கட்டுப்படுத்த உதவுவதன் மூலம் இறுதி மாதவிடாய் (நிரந்தரமாக நின்றுபோன) மற்றும் அதற்கு முன்பான அறிகுறிகளைக் குறைக்க உதவுகின்றது.

7. முன்னிலைச் சுரப்பியில் ஏற்படும் பிரச்சினைகளுக்கெதிராகச் செயற்படுகின்றது- புரோட்டினெக்ஸ் போன்ற சோயா செறிந்த உணவுகளை உட்கொள்வதால் ஆண்களில் முன்னிலைச்சுரப்பி பெரிதாவது தடுக்கப்படுகின்றது. ஆண்களில் வயது முதிரும் போது முன்னிலைச்சுரப்பியும் பருமனில் பெரிதாவதால் அடிக்கடி இரவில் சிறுநீர் கழித்தல் மற்றும் சிறுநீர் கழிக்கும் போதுசிரமம் போன்றவை ஏற்படக்கூடும்.

8. Endometriosis இற்கு எதிராகச் செயற்படுகின்றது- Endometriosis என்பது அசாதாரணமாக கருப்பைச் சுவர் வெளிப்புறமாக தடிப்படையும் செயற்பாடு. இதன்போது வயிற்றில் வலி ஏற்படும். புரோட்டினெக்ஸில் உள்ள isoflavones ஆனது ஈஸ்ரஜனின் தொழிற்பாட்டை மேம்படுத்துகிறது.

New

Powder
**PROTINEX®**
புரோட்டினெக்ஸ்®
நாள்தோறும் இழக்கும் சக்தியை மீட்டுத்தருகிறது

சிறப்பு அங்காடிகள், கடைகள் மற்றும் அனைத்து பாமசிகளில் இப்போது பெற்றுக் கொள்ளலாம்.







மேலதிக சீனி சேர்க்கப்படவில்லை.

**CHOLESTEROL FREE LACTOSE FREE 14 VITAMINS 11 MINERALS**

Manufactured by:
Astron 1956 - 2006 Fifty Years of Commitment to Healthcare Solutions
Astron Limited., 688, Galle Road, Ratmalana, Sri Lanka. Tel: 2636741, 5566741 Fax: 2636173 E-mail: astron@astron.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் (Action Contre la Faim) மூதூர் கிளையில் பணியாற்றி அகாலமரணமடைந்த

| | |
|---|---|
| K. கோவர்த்தனி | - வயது - 27 |
| G.கவிதா | - வயது - 27 |
| S.றொமிலா | - வயது - 25 |
| V.கோகிலவதனி | - வயது - 29 |
| N.நர்மதன் | - வயது - 23 |
| R.அருள்ராஜ் | - வயது - 24 |
| T.பிரதீபன் | - வயது - 26 |
| M.றிஷிகேசன் | - வயது - 22 |
| A.ஜயசீலன் | - வயது - 27 |
| G.சிறிதரன் | - வயது - 36 |
| S.பிறேம்ஸ் ஆனந்தராஜ் | - வயது - 32 |
| Y.கோடீஸ்வரன் | - வயது - 30 |
| M.கேதீஸ்வரன் | - வயது - 36 |
| S.கணேசு | - வயது - 54 |
| I.முரளிதரன் | - வயது - 33 |
| S.கோணேஸ்வரன் | - வயது - 24 |

ஆகிய சகோதர சகோதரிகளுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளை காணிக்கையாக்குவதுடன் அவர்களின் ஈடுசெய்யமுடியாத இழப்பினால் துயறுற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ACF பணியாளர்கள்,
யாழ்ப்பாணக் கிளை.

(53130)
(18-12-49)

# 45 ஆம் நாள் வீட்டுக்கிரியை அழைப்பு



கடந்த 26.06.2006 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் வைரவநாதர் குணசேகரம்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் பூர்வபட்ச பிரதமை திதியில் இன்று(09.08.2006) புதன்கிழமை நடைபெறவுள்ளன. இந் நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தம்பளை,
அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

(51131)
(18-12-49)

குடும்பத்தினர்.

# துயர் பகிர்கிறோம்



எமது ஆசிரிய நண்பன்
இரா .செல்வவடிவேல் அவர்களின்தாய்

## இராமசாமி சுப்பம்மாள்

இறைவனடி சேர்ந்தமையையிட்டு துயறுற்றிருக்கும் நண்பருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

த.வரதராஜா - எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் - இருபாலை
ஞான.திருகேதீஸ்வரன் - K.T.C. கல்வி நிறுவனம்- கோண்டாவில்
வி.தயாபாலன்-கங்கை பிறின்ரேர்ஸ் -கே.கே.எஸ். வீதி, யாழ்.
சண். வாமதேவன் - விக்னேஸ்வரா கல்வி நிலையம்- கொக்குவில்
நடராசா நேசகுமார் - நாச்சிமார் கோயிலடி

(சி-50716)
(18-12-49)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிறுவனத்தின் ஆசிரியரான
இரா. செல்வவடிவேலின் அன்புத் தாய்

## திருமதி இராமசாமிசெட்டியார் சுப்பம்மாள்

அவர்களது பிரிவுச் செய்திகேட்டு துயருறும் அதேவேளை, அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மணிக் கல்வி நிறுவனம்
ஆசிரியர்கள், மாணவர்கள்,

(53128) (18-12-49)

# கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன சிரேஷ்ட விஞ்ஞான ஆசிரியர் இரா. செல்வவடிவேல் அவர்களின் அன்புத் தாய்

## திருமதி இரா. சுப்பம்மாள்

அவர்களது பிரிவால் துயறுற்றிருக்கும்குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகி, ஆசிரியர்கள்,
மாணவர்கள், பணியாளர்கள்,

எடிசன் அக்கடமி,
யாழ்., நல்லூர்.

(53133) (18-12-49)

# வழிகாட்டல் கருத்தரங்கு

தென்மராட்சி, ஓக.9

தென்மராட்சி கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இன்று காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வழிகாட்டல் கருத்தரங்கில் அனைத்து சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## முருகப்பா கந்தையா

(கோண்டாவில் கிழக்கு)

மலர்வு 08-03-1936
உதிர்வு 10-07-2006

வாழ்வில் பிரியமுடன் எம்மை நேசித்தீர்
நிஜவாழ்வில் நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்தாலும்
எமது இதயத்தில் என்றும்
ஒளி வீசிக்கொண்டே இருப்பீர்கள்!

இன்று *(09.08.2006)* புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

கந்துஜா வீடியோ,
கோண்டாவில்.
தொ.பே.:
0776292415

பிள்ளைகள்
(சுவிஸ், லண்டன்)

(53129)
(18-12-49)

# தவறிவிட்டது

P.ஜனகன் என்பவரின் பெயரிடப்பட்ட "High Ways" பாடக் குறிப்புக் கோப்பி தாவடிச் சந்திக்கும் சுதுமலை G.T.M. School இற்கு இடையில் தாவடிமானிப்பாய் வீதியில் 08.08.2006 ஆம் திகதி காலை 8.30 - 9 மணிக்கு இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் முகவரியில் கையளிக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ந.கலாவர்ணன்(T.O)
பிரதேச சபை, மானிப்பாய்.
தொ.பே.: 021 222 2681

இல.3, சேர்.பொன் இராமநாதன் வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 077 6983646

(53171)
(18-12-49)

# தவறிவிட்டது

புதுவீதி, அத்தியடியைச் சேர்ந்த க.பத்மநாதன் என்பவருடைய முக்கிய ஆவணங்கள் முகமாலைக்கும் யாழ். நகருக்கும் இடையில் தவறிவிட்டன.கண்டெடுத்தவர்கள் 250, நாவலர் வீதி,இலுப்பையடிச் சந்தி (கடை),யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.

(53130)
(18-12-49)


நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்.

குடும்பத்துடன் பார்த்து மகிழ வேண்டிய படம்
சூப்பர்மான் ரிட்டேன்ஸ்
(superman returns)

12.08.2006 சனிக்கிழமை கட்டட நிதியுதவிக்காட்சி
சிவாஜி, பத்மினி நடித்த
தில்லானா மோகனாம்பாள்

ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
ஜெயம்ரவி, திரிஷா, தேஜாஸ்ரீ, ரிச்சாட்பட்டேல்
சம்திங் சம்திங்
உனக்கும் எனக்கும்
காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்
ரிக்கட் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(சி-47139)

40%

மார்க்கோணியின் நினைவு தினத்தை முன்னிட்டு தபாற் கற்கைகளுக்கு 40வீத கழிவு வழங்கப்படுகிறது. இது Aug 25th வரை!! (ஒரு வருடத்தில் ஒரு முறை)

| | |
|---|---|
| Dip in TV, Radio,VCD Repair | - 1500/= |
| Dip in Cellphone Repairs | - 1200/= |
| Dip in Electrical Wiring | - 1200/= |
| Dip in Computer Hardware | - 1000/= |
| Dip Computer Device Repair | - 1200/= |
| Cer in Electronics ( For all) | - 750/= |



மணிஓடர் மூலம் அனுப்பவும் (பதிவுத்தபால்) இடம் - Wellawatte Post Office, பெறுபவரின் பெயர் Manager, Marconi Technical Institute. மேலதிக கற்கைநெறி தகவல்களுக்கு TP - 2 361 362. இல்லாவிட்டால் ரூ 5 ...

Marconi Technical Institute, 410 - 2/1, Galle Road, Col. 06. 2361362


# மரண அறிவித்தல்கள்

## அம்பிகாபதி ஜசீலன்

*(சீலன்/குட்டி) உத்தியோகத்தர் Action-faim திருகோணமலை)*



அல்வாய் வடமேற்கு, பூமாஞ்சோலையைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை லிங்க நகரை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பிகாபதி ஜசீலன் 05.08.2006 அன்று மூதூர் நகரில் மனிதாபிமான அடிப்படையில் தொண்டு நிறுவனத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த போது அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேல் அம்பிகாபதி - மாலினிதேவி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் ஜயன் (பலாலி ஆசிரியர் கலாசாலை), ஜனார்த்தனன் (கணனி பொறியியலாளர்), ஜயதா (யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று(08.08.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது வசிப்பிடமான இல.04, லிங்கநகரில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக திருகோணமலை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே.: 0773223214,
0785565430

தகவல்:
சிறிய தந்தைமார்
க.விவேகானந்தன், கோகுலம்(அல்வாய்).
ந.கிருபகரன் (இராஜேஸ்வரி வீதி,அரியாலை).

(53117)
(18-12-49)

## சதாசிவம் கஜரூபன் (ரூபன்)



ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் கஜரூபன் நேற்று (08.08.2006) செவ்வாய்க்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் - புஸ்பலீலா தம்பதியரின் பாசமிகு மகனும் சாந்தரூபன், சிவரூபன், ஜலஜா (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), வேணுஜா (வசாவிளான் மகாவித்தியாலயம்) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(09.08.2006) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பொக்கணை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வீதி,*
*ஊரெழுமேற்கு, சுன்னாகம்.*

தகவல்:
தாய்.

(சி-50724)
(18-12-49)

## திருமதி கதிரவேல் மகாலட்சுமி



உரும்பிராய் தேவாலய எதிர் ஒழுங்கையை பிறப்பிடமாகவும் உரும்பிராய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது திருநெல்வேலி சிவன் அம்மன் வீதியில் வசித்து வந்தவருமான திருமதி கதிரவேல் மகாலட்சுமி நேற்று (08.08.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கதிரவேலின் (முன்னாள் உத்தியோகத்தர், சாமுவேல் சன்ஸ்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகமுத்து - பொன்னுப்பிள்ளை (இமையாணன், உடுப்பிட்டி) தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இரத்தினம், காலஞ்சென்ற இராசலட்சுமி, காலஞ்சென்ற அன்னலட்சுமி, காலஞ்சென்ற சொர்ணம், சிறிநடராஜ், காலஞ்சென்ற மகாதேவன், காலஞ்சென்ற சித்தானந்தன்(ஆஸ்திரேலியா) சிவானந்தன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தங்கராசா,காலஞ்சென்ற தர்மலிங்கம், செல்லப்பாக்கியம், முத்துராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.08.2006) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் திருநெல்வேலியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சோதிமாளிகை,சிவன் அம்மன் வீதி,*
*திருநெல்வேலி.*

தகவல்:
நா.கதிரவேல்
(கணவர்).

## திருமதி தம்பையா அன்னம்மா

சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது சங்கானை ஆஸ்பத்திரி வீதியில் வசித்தவருமாகிய திருமதி தம்பையா அன்னம்மா நேற்று(08.08.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்ற இந்திராணி, ஜெயபாலன், ஜெயராணி, ஜெயக்குமார்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் இராசரத்தினம் (ரயில்வே ஓய்வூதியர்), பரமேஸ்வரி, தனபாலசிங்கம், விக்கினேஸ்வரன்(மக்கள் வங்கி ஓய்வூதியர்) ஆகியோரின் சகோதரியும் விதுஷா,மயூரன், அயந்தினி,குகனேஸ்வரன்,குகனேஸ், குகதாஸ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கணேச வாசா,*
*ஆஸ்பத்திரி வீதி,சங்கானை.*

(53050)

தகவல்:
வே.விக்னேஸ்வரன் (தம்பி - மக்கள் வங்கி ஓய்வூதியர்)

## முத்தையா தருமராசா

காரைநகர், சிதம்பராமூர்த்தி கேணியடியைச் சேர்ந்தவரும் தற்போது குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய முத்தையா தருமராசா அவர்கள் நேற்று (08.08.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராசா கமலாதேவி, காலஞ்சென்ற இந்திராணி மற்றும் செல்வராசா (தபாற் கந்தோர் காரைநகர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(08.08.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குளப்பிட்டி லேன்,*
*கொக்குவில் கிழக்கு.*

(சி-50723)

தகவல்:
ச.நவரத்தினராசா
(மருமகன் நவம் ரெக்ஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் ஊடக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற சம்பவங்களை இங்குள்ள ஊடகங்கள் திரிபுபடுத்தி செய்திகளை வெளியிட்டன.

இராணுவத் தளபதி மீதான தாக்குதலின் பின்னர் அரசு கட்டுப்பாடற்ற பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் மீது விமானக் குண்டு வீச்சு நடத்தப்பட்டது. இதன் எதிரொலியாகவே மாவிலாறு அணைக்கட்டு மூடப்பட்டது. மனிதாபிமான முறையில் அது திறக்கப்படவேண்டும். இருந்தும் நாம் எவ்வாறு அதை திறக்கும்படி கேட்பது? இந்தச் செய்திகள் அனைத்தும் தென்பகுதி ஊடகங்களில் இருட்டடிப்புச் செய்யப்பட்டன.

மாவிலாறு பிரச்சினை காரணமாக தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் இடம்பெயர்ந்து சொல்லொணா துன்பங்களை அனுபவிக்கின்றனர். முஸ்லிம் மக்களின் நலன்களை கவனிக்க முஸ்லிம் அமைச்சர்கள் செல்கின்றனர். சிங்களமக்களுக்காக சிங்கள அமைச்சர்கள் செல்கின்றனர். புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம் பெயர்ந்த தமிழ் மக்களுக்கு நிவாரணம் வழங்குவது யார்? அரசு வழங்கவேண்டும். அல்லது அவர்களுக்கு திருமலை வந்து பொருட்களைக் கொள்வனவு செய்ய அனுமதி வழங்கவேண்டும். அப்பகுதிக்கான பொருளாதாரத்தடையை நீக்க வேண்டும். புலிகளின் பிரதேசத்தில் வாழும் 40 ஆயி ரம் குடும்பங்களுக்கான சகல வசதிகளையும் உடனடியாக வழங்கவேண்டும்.

திருகோணமலை அரச அதிபர் ஒரு படை அதிகாரி. இவரை மாற்ற அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மூதூரில் அரச சார்பற்ற நிறுவனமொன்றில் கடமையாற்றிய 15 பேரை கடற்படையினர் சுட்டுக் கொலை செய்துள்ளனர். திருமலையில் தமிழ் வர்த்தகர்கள் கடற்படையினரால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனர். சமூகசேவையில் ஈடுபட்ட 15 பேர் கொலை செய்யப்பட்டது தொடர்பாக தென்னிலங்கையில் எந்த பத்திரிகையும் செய்தி வெளியிடவில்லை - என்றார் (ஐ)

## கொழும்புத்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடையைப் பூட்டிவிட்டு இலந்தைக்குளம் வீதியில் உள்ள தமது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தார் என்றும்-அவரைப் பின்தொடர்ந்து மோட்டார் சைக் கிளில் வந்தவர்கள் சுட்டுவிட்டு ஓடிவிட்டனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

அவர் உடன் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். பின்னர் அவர் உயிரிழந்தார்.(1-30)

## மாவிலாறு அணையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் சி. எழிலன் நேற்றுமாலை அணைக்கட்டுப் பகுதிக்குச் சென்று கால்வாயில் நீரோட வசதியாக அணையைத் திறந்துவிட்டார் என்று விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு விடயங்கள் தொடர்பான அரசின் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதனை 'சுத்தப்பொய்' என்று கூறி மறுத்திருக்கின்றார்.

அணை திறக்கப்பட்டிருப்பது தொடர்பாக திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. எழிலன் கூறியதாவது:-

நோர்வேயின் பிரதிநிதிகளின் வேண்டுகோளுக்கு அமையவும் மனிதாபிமான அடிப்படையிலும் தலைவரின் பணிப்பிற்கமைவாகவும் மாவிலாறு அணைக்கட்டைத் திறப்பதற்கான ஏற்பாட்டை செய்திருந்தோம். நேற்று முன்தினம் அது கைகூடாமல்போனது. இன்று பிற்பகல் 5 மணியளவில் நாங்கள் இந்த அணையைத் திறந்துள்ளோம்.

மாவிலாறு அணையைப் பொறுத்தவரையில் அது தொடர்பான பிரச்சினைகள் பல உருவாகியிருந்தன. இடையில் மக்களுடைய கோரிக்கைகள் பல முன்வைக்கப்பட்டிருந்தன. அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடிய சாத்தியக்கூறுகளைத் தாங்கள் எடுத்துக்கொள்வதாக நோர்வே பிரதிநிதிகள் கிளிநொச்சியில் நடைபெற்ற பேச்சின்போது தெரியப்படுத்தியிருந்தனர். 3 வாரங்களுக்குள் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாட்டைச்செய்வதாக அவர்கள் உறுதியளித்திருந்தனர்.

இந்த அடிப்படையில் நேற்றுமுன்தினம் மாவிலாற்றைத் திறப்பதற்கு கண்காணிப்புக் குழுவினருடன் சென்றபோது, படையினர் தொடர்ச்சியான தாக்குதலை நடத்தியதன் காரணமாக அணையைத் திறக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இன்று (செவ்வாய்) பிற்பகல் 5 மணியளவில் நாங்கள் இந்த அணையைத் திறந்து வைத்துள்ளோம் - என்று எழிலன் தெரிவித்தார்.

அணையைத் தங்களது படைகளே பொறியியலாளர்களுடன் சென்று திறந்துவிட்டன என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறினார்.

அணைக்கட்டுப் பகுதியில் மிகத் துல்லியமாக விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதன் பின்னர் படையினர், பொறியியலாளர்களுடன் அணைக்கட்டைச் சென்றடைந்தனர்.- என்று ரம்புக்வெல கூறினார்.

கேள்வி:- விடுதலைப் புலிகள் மனிதாபிமான அடிப்படையில் அணைக்கட்டைத் தாங்களே திறந்தனர் என்று சொல்கிறார்களே...?

ரம்புக்வெல:- நாங்கள் புலிகள் கூறுவது குறித்து ஆச்சரியப்படவில்லை. விடுதலைப் புலிகள் தாங்கள் செய்யாததைச் செய்தது என்றும் செய்ததைச் செய்யாதது என்றும் கூறி வருவதைப் பார்த்த அனுபவம் எங்களுக்கு இருக்கிறது.

ஒரு திட்டத்துடன் நாங்கள் செயற்பட்டோம். அதில் வெற்றி பெற்றிருக்கிறோம். அதை விட முக்கியமாக அந்தப் பகுதியை எங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்திருக்கிறோம். இதனால், தடையில்லாமல் நீர் கிடைக்க வழி ஏற்பட்டிருக்கிறது.

கேள்வி:- சரி. மாவிலாறு பிரச்சினையைத் தொடர்ந்துதான் பெரிய அளவில் மோதல்கள் ஏற்பட்டன. தற்சமயம் தண்ணீர் திறந்து விடப்பட்ட நிலையில் தாக்குதல் நடவடிக்கைகள் நிறுத்தப்படுமா?

ரம்புக்வெல:- படையினரைப் பொறுத்தவரை 'ஆமாம்' என்று சொல்லலாம். தண்ணீரைத் தடுக்கும் நடவடிக்கை எதுவும் நடக்காதவரை இது தொடரும். தண்ணீரை ஓர் உத்தியாகப் பயன்படுத்தக்கூடாது என்று ஆரம்பத்தில் இருந்தே நாங்கள் கூறிவந்திருக்கிறோம். இதனை ஒரு மனிதாபிமானப் பிரச்சினையாக விடுதலைப் புலிகள் பார்த்திருந்தால் 20ஆம் திகதியே தண்ணீரைத் திறந்து விட்டிருக்கலாம். அப்படிச் செய் திருந்தால் மூதூரில் கூட பல பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது.

இப்படி ரம்புக்வெல தெரிவித்தார். (ஐ)

## ஈ.பி.டி.பி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குண்டு வெடிப்பில் சிக்கிய வான் தீப்பற்றி எரிந்து கருகியது. அந்த இடத்தில் வீதியில் சென்று கொண்டிருந்த சிலர் குண்டுச் சிதறல்களால் காயமடைந்தனர்.

ஈ.பி.டி.பி. பிரமுகர் சிவதாஸனை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிவதாஸன் பணயம் செய்த வாகனத்தை இலக்கு வைத்து கிளைமோர் கண்ணி ஒன்றே வெடிக்க வைக்கப்பட்டது என்று முதலில் வெளியான தகவல்கள் தெரிவித்தன. எனினும், வானை நோக்கி கைக்குண்டுகள் வீசப்பட்டிருக்கலாம் என்று விசாரணையாளர்கள் கருதுகின்றனர் என்று மற்றொரு தகவல் தெரிவித் தது.

காந்தத்தின் உதவியுடன் வானின் கீழ்ப் பகுதியில் நேரங் கணித்துப் பொருத்தப்பட்ட ('டைம் பொம்') குண்டு ஒன்றே வெடித்தது என்று பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

குண்டு வெடிப்பில் சிக்குண்ட வாகனம் எரிந்து முற்றாகக் கருகிய நிலையில் வீதியில் கிடந்தது.

தமிழ் அரசியல்வாதியான சங்கரப்பிள்ளை சிவதாஸன் நீண்ட காலமாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினராகச் செயற்பட்டு வந்தவர்.

தற்போது பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக பணிபுரிந்து வரும் அவருக்கு வயது 73.

சம்பவம் தொடர்பாக முழு அளவிலான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் விடுதலைப் புலிகளே இத்தாக்குதலை நடத்தி இருக்கின்றனர் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை என்றும் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனாலும், இக்குண்டு வெடிப்பு உள்வீட்டுச் சர்ச்சையாலும் ஏற்பட்டிருக்கலாம் என சில வட்டாரங்களில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

ஈ.பி.டி.பி.யிலிருந்து கலாநிதி விக்னேஸ்வரன் வெளியேறிய பின்னர் அவரின் புதிய கட்சியான தமிழர் ஐக்கிய முன்னணிக்கு சிவதாஸனும் மாறக் கூடும் என்ற பேச்சு அடிபட்டதும் கவனிக்கத்தக்கது.

## கோண்டாவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கஜரூபன் (வயது-24) என்ற இளைஞரே கொல்லப்பட்டவராவார்.

காலையில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் வீட்டிலிருந்து புறப்பட்ட இந்த இளைஞரைப் பின்தொடர்ந்து வேறு ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளந் தெரியாத நபர்கள் இருவர் அவரைச் சுட்டுவிட்டுச் சென்றனர் என்று கூறப்படுகிறது. யாழ். மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை நடத்தினார்.

(ஐ-86-15-49)

## மூதூர் நிலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்கள் கூட்டமொன்றைக் கூட்டினார்.

நாடாளுமன்றத்தில் வாய் மூல விடைகளுக்கான கேள்வி நேரத்தின் பின்னர் எதிர்க்கட்சிப் பிரதம கொரடா ஜோஸப் மைக்கல் பெரேரா மூதூர் நிலைமைகள் குறித்து நாடாளுமன்றத்தில் உடனடியாக விவாதமொன்று நடத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண் டார்.

உடனடி விவாதத்துக்குத் தாங்கள் தயாராக வரவில்லை. வியாழனன்று அவசரகாலச் சட்ட நீடிப்பு மீதான விவாதம் நடைபெறவுள்ளது. அப்போது இது குறித்துப் பேசமுடியுமென ஆளும் கட்சியின் பிரதம கொரடா அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித் தார்.

இச்சந்தர்ப்பத்தில் நாட்டின் இன்றைய நிலை குறித்த அவசர விவாதம் நடத்தப்பட வேண்டுமென 20 எம்.பி.க்களுக்கு மேல் கோரிக்கை விடுத்தால் அதற்கு சபையில் அனுமதி வழங்கப்பட வேண்டுமென ஜோஸப் மைக்கல் பெரேரா எம்.பி. தெரிவித்தார். இதையடுத்து ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய எம்.பி.க்கள் தவிர்ந்த ஏனைய எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.

காலை ஊடகவியலாளர்களுக்கான முக்கிய சட்டமூலமொன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதன் பின்னர் மாலை 2.30 மணிக்கு இவ்விடயம் தொடர்பாக விவாதிக்க முடியுமென ஆளும் கட்சிப் பிரதம கொரடா ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார். இருந்தும் சபையில் சர்ச்சை ஓயவில்லை.

இதையடுத்து சபாநாயகர் இது குறித்து முடிவெடுக்கக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டப் போவதாகத் தெரிவித்து சபையை காலை 10.20 மணிக்கு ஒத்திவைத்தார்.

மீண்டும் 11.30 மணிக்கு சபை கூடியது. மூதூர், தோப்பூர் மோதல்கள், அதனால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்து நாளை முழு நாள் விவாதம் நடத்தப்படும். அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை மீதான விவாதம் வெள்ளிக்கிழமை நடைபெறும் ஏன்று. சபாநாயகர் அறிவித்தார். (ஐ)

## பொத்துவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினருக்கு தண்ணீர் எடுத்துச்சென்ற அதிரடிப்படையினர் மீது அம்பாறை பாணமமையில் உகந்தபனகல பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.20 மணியளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

பொத்துவில் சந்திவெளி அதிரடிப்படை முகாமைச் சேர்ந்த சார்ஜன்ட் கே.டபிள்யு. சுமதிதாச மற்றும் கான்ஸ்டபிள் எம்.என். பண்டார ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராமசாமிசெட்டியார் சுப்பம்மாள்



திருமதி இராமசாமிசெட்டியார் சுப்பம்மாள் அவர்கள் (06.08.2006) ஞாயிற்றுக் கிழமை காலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் இராமசாமிசெட்டியாரின் மனைவியும் குருவம்மாள், இரா.செல்வவடிவேல் (விஞ்ஞான ஆசிரியர்), அமரர் பால்ராஜ், செல்வராணி (லண்டன்), வசந்தி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயும் அமரர் சாந்தவராயன், சியாமளா, கதிர்காமநாதன் (லண்டன்), பாலாஜி (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமியும் கனகராஜா (பிரான்ஸ்), மகேஸ்வரி, இராஜசேகரம், அனுஷியா, மகாலட்சுமி, மிருனாளினி, பரமேஸ்வரன், தர்மினி, கணேசவேல், ரிஷிகோபன் (மாணவர்கள்- யாழ் பரியோவான் கல்லூரி), சோபி, சுகந்தன், பிருந்தன், பிரசாந்தன், நசிகேசன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2006) புதன் கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*142/1, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*தொ.பே.: 2228165* (53120)

**தகவல்:**
**இரா.செல்வவடிவேல்**
**(மகன் - விஞ்ஞான ஆசிரியர்).**

### திருமதி சின்னத்துரை செல்லமுத்து

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை செல்லமுத்து நேற்று (08.08.2006) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குட்டிப்பிள்ளை சின்னத்துரையின் அன்பு மனைவியும் திருமதி அருந்தவராணி கிருஷ்ணானந்தத்தின் (ஆயுர்வேத வைத்திய அதிகாரி-நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்)பாசமிகு தாயும் கிருஷ்ணானந்தத்தின் (இலங்கை வங்கி,2 ஆம் கிளை, யாழ்ப்பாணம்) அன்பு மாமியும் சமாஹிதன் (யாழ். இந்து ஆரம்பபாடசாலை), தர்ஜனீஹிதன் (பாலர் பாடசாலை சைவபரிபாலன சபை) ஆகியோரின் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(09.08.2006) புதன் கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உடுப்பிட்டி கரம்பாவெளி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*15 ஆம் கட்டை,*
*உடுப்பிட்டி.*

**தகவல்:**
**பா.கிருஷ்ணானந்தம்**
**(மருமகன்).**





கணனி வடிவமைப்புத் துறையில் தேர்ச்சியும் அனுபவமும் உள்ளவர்கள் பணியாற்றுவதற்கு சிறந்ததொரு சந்தர்ப்பம். கொழும்பில் அல்லது யாழ்ப்பாணத்தில் பணியாற்றுவதற்கான வாய்ப்பு.

Page maker, Photo shop and Corel draw ஆகிய மென்பொருள்களைக் கையாண்டு வடிவமைப்பை மேற்கொள்ளும் தகுதியானவர்களுக்கு உடனடி வேலை. 09.08.2006 புதன்கிழமை நேரில் வரவும்.

*உதயன் மனிதவளசேவை*
*361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*



**PAPER CLASS**
A/L தமிழ்
ஆரம்பம்
11.08.2006 வெள்ளி 3.30 p.m.
BY: குழந்தை
யூனிவேர்சல்
(யா/ இந்து மகளிர் கல்லூரி அருகே)

**கலைப்பிரிவு- 2008**
Tam. -G.ஜனகன்
Eco. -B.கஜீந்திரன்
Log. -M.பிரகாஷ்
Geo.-J.ஜெயகணேஷ்
துரித மீட்டலுடன் வகுப்புகள் நடைபெறுகின்றது.
**BRAIN POWER INSTITUTE**
குருநகர், யாழ்ப்பாணம்

**வரலாறு**
A/L 07 Paper Class
A/L 08 ஆரம்ப அலகு
By:சுஜிகரன்
12.08.2006 சனி 10a.m.
**யூனிவேர்சல்**
(யாழ்.இந்து மகளிர் கல்லூரி அருகில்)




*கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல நிறுவனங்களில் கணனித் தட்டெழுத்தாளர் பயிற்சிக்கு ஆள்கள் தேவை. கணனி பற்றிய அறிவு மட்டுமே போதுமானது. தகுதியானவர்கள் 09.08.2006 அன்று காலை 10.00 மணிக்கு நேரில் வரவும்.*

**உதயன் மனிதவள சேவை**
**361, கஸ்தூரியார் விதி,**
**யாழ்ப்பாணம்.**

**தேவை...**
**மோட்டார் சைக்கிள்**
*பாவனையிலுள்ள மோட்டார் சைக்கிளை விற்பனை செய்ய விரும்புபவர்களே!*
*உங்கள் மோட்டார் சைக்கிள் நல்ல நிலையில் உண்டானால் நேரில் வாருங்கள்.*
*விலை, ஏனைய தேவையான விவரங்களை நேரில் பேசி முடிவு செய்யலாம்.*
**உதயன் மனிதவள சேவை,**
*361, கஸ்தூரியார் விதி, யாழ்ப்பாணம்.*


*இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.08.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org